
# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2026 ஆகஸ்ட் 1–15 தொகுதி 25 இதழ் 1 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200



# ஆகஸ்டு வேலை கொடு இயக்கம்

## பாஜக அரசுகளின் மக்கள் விரோதக் கொள்கைகளை அம்பலப்படுத்துவோம்!

# இடதுசாரிக் கட்சிகள் கூட்டாக அறிவிப்பு




தில்லியில் உள்ள சிபிஐ(எம்எல்) கட்சியின் மத்திய அலுவலகமான சாரு பவனில், சிபிஐ, சிபிஐ(எம்) மற்றும் சிபிஐ(எம்எல்) ஆகிய மூன்று இடதுசாரிக் கட்சிகளின் தலை வர்கள் ஜூலை 28 அன்று சந்தித்து, தற்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்துக் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர்.

தோழர் சாரு மஜூம்தாரின் 54-ஆவது நினைவு நாளையொட்டி, தலைவர்கள் அவருக்கு மலரஞ்சலி செலுத்தி செவ்வணக்கம் செலுத்தினர். இக்கூட்டத்தில் சிபிஐ தலைவர்கள் து. ராஜா, ராமகிருஷ்ண பாண்டா, டாக்டர் கிரீஷ் ஆகியோரும், சிபிஐ(எம்) தலைவர்கள் எம்.ஏ. பேபி, அருண் குமார் ஆகியோரும், சிபிஐ(எம்எல்) சார்பில் திபங்கர், ரவி ராய், சஞ்சய் சர்மா, சுச்சேதா டே, ஸ்வேதா ராஜ், பிரபாத் சவுத்ரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஜந்தர் மந்தரில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டங்கள் மூலம் மாணவர் இயக்கம் பெற்றுள்ள மாபெரும் வெற்றியை மூன்று கம்யூனிஸ்ட் கட்சிகளும் கூட்டாக வரவேற்றன. காவல்துறையின் அடக்கு முறைகளைத் தாண்டி, துணிச்சலுடனும் படைப்பாற்றலுடனும் போராடி ஒன்றியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை பதவி விலகச் செய்ய வைத்த இடதுசாரி மாணவர் அமைப்புகள் மற்றும் சிஜேபி ஆர்வலர்களுக்குத் தலைவர்கள் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

ஜந்தர் மந்தர் ஒப்பந்தத்தை அனைத்து மாநில பாஜக அரசுகளும் மதிக்க வேண்டும் என்றும், மாணவர்-இளைஞர் இயக்க ஆர்வலர்கள் மீதான அனைத்து வகையான பழி வாங்கும் நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. மேலும், கல்வி மற்றும் தேர்வு முறையில் முறையான சீர்திருத்தங்களை நிலைநாட்டுவதற்கும், பாதுகாப்பான மற்றும் கவுரவமான வேலைவாய்ப்பு உரிமைகளைப் பெறுவதற்கும் ஜந்தர் மந்தர் போராட்டத்தின் எழுச்சி தொடர வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகத் தொழிற்சங்கம், விவசாயிகள், கிராமப்புற உழைப்பாளர்கள் மற்றும் மகளிர் அமைப்புகளிடையே பரஸ்பர ஒருங்கிணைப்பை மேலும் வளர்த்தெடுக்க மூன்று கட்சிகளும் ஒப்புக்கொண்டன.

ஏகாதிபத்திய தாக்குதல்கள் மற்றும் கார்ப்பரேட் கொள்ளைகளுக்கு எதிராக உழைக்கும் மக்களுக்குப் பொருளாதார நிவாரணம் வழங்குவதுடன், மக்களவை மற்றும் மாநிலச் சட்டப்பேரவைகளில் பெண்களுக்கான 33 சதவிகித இடஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மேலும், சங்-பரிவார் மற்றும் பாஜக தலைமையிலான இரட்டை என்ஜின் அரசுகளின் பாசிசத் தாக்குதல்களுக்கு எதிராக ஒருங்கிணைந்து செயல்படுவதன் அவசியமும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

மாலெ தீப்பொறி

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் குழுவின் அரசியல் ஏடு**

**இருவார இதழ்**
*2026 ஆகஸ்ட் 1-15*
*தொகுதி 25 இதழ் 1*

முதன்மை ஆசிரியர்
*சங்கர்.வீ*

ஆசிரியர்
*ஜி.ரமேஷ்*

ஆசிரியர் குழு
*பழ.ஆசைத்தம்பி*
*பாலசுந்தரம்*
*அ.சந்திரமோகன்*
*கே.ஜி.தேசிகன்*

அட்டை வடிவமைப்பு
*பாட்டாளி*

மேலாளர்
*சொ. இரணியப்பன்*

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

*நிர்வாக அலுவலகம்*
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048
தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

# ஜனநாயகனின் ஜனநாயகம்

தில்லி, ஜந்தர்மந்தரில் நீட் முறைகேடுகளுக்கு எதிராக இளைஞர்களும் மாணவர்களும் போராட்டத்தை துவங்கியிருந்தபோது, தமிழ்நாட்டை ஆளும் தவெக அரசு, இங்குள்ள இளைஞர், மாணவரை விஜய்யின் ஜனநாயகன் திரைப்பட வெளியீட்டு விழாவிற்குத் தயார் படுத்திக் கொண்டிருந்தது. ஜூலை 20 அன்று நாடாளுமன்றம் நோக்கிப் பேரணி அறிவித்திருந்த அந்த நாளில், ஒன்றிய பாஜக அரசு, தன் நாட்டு மாணவர், இளைஞர், பெண்கள், குழந்தைகள் மீது கொடுந்தாக்குதலை அரங்கேற்றியது. அதைக் கண்டித்து வீதிகளிலும் பள்ளி, கல்லூரி வளாகங்களிலும் போராடிய தமிழ்நாட்டு மாணவர்கள், இளைஞர்கள் மீது முதல்வர் விஜய்யின் கையில் உள்ள காவல்துறை காட்டு தர்பார் நடத்தியது. கைது செய்தது. மாணவர் அமைப்புகள் போராட்டத்திற்கு அனுமதி கேட்டபோது அனுமதி மறுக்கப்பட்டது. பொது இடத்தில் மட்டுமல்ல, தனியார் இடங்களிலும்கூட அமைதியான போராட்டத்தை நடத்த அனுமதிக்கவில்லை. சட்டத்திற்குப்புறம்பாக இதுவரை இல்லாத வகையில், தமிழ்நாட்டின் காவல்துறை பள்ளி, கல்லூரிகளுக்குள் வகுப்பறைகளுக்குள் சென்று மாணவர்களைக் கைது செய்தது. கல்வி நிறுவனங்களின் வளாகத்திற்குள்ளே காவல்துறை செல்லக் கூடாது என்கிறபோது, பள்ளி, கல்லூரிகளுக்குள் அத்துமீறி நுழைந்து மாணவர்களை அடித்து இழுத்துச் சென்றது. ஆனால், போராடுவதற்கு முறையாக அனுமதி பெறாததால்தான் கைது செய்தோம் என்று கல்வி அமைச்சர் ராஜ்மோகன் கூச்சமில்லாமல் பொய் சொன்னார். அதோடு மட்டுமின்றி, சாலைகள் போராடுவதற்கு அல்ல என்று கூறினார். அவர் தலைவரின் ஜனநாயகன் படத்தின் கொண்டாட்டத்திற்கு மட்டும்தான் போலும். ஜந்தர் மந்தர் தாக்குதலைக் கண்டித்து நாடெங்கும் போராட்டங்கள் உக்கிரமாக, மெரினா கடற்கரையில் மாணவர், இளைஞர்கள் கூடிவிடக் கூடாது என்பற்காக, மெரினா கடற்கரையை சீல் வைத்து விட்டது விஜய்யின் காவல்துறை. நிழலில் நீதிக்காக புரட்சியாளராக திரைப்படங்களில் வசனம் பேசும், போராட்டங்களைத் தலைமை ஏற்றும் நடத்தும் விஜய், நிஜ வாழ்க்கையில், தன் கையில் ஆட்சியும் அதிகாரமும் இருக்கும்போது நியாயத்திற்காகப் போராடுபவர்கள் மீது ஒடுக்குமுறையை ஏவிவிட்டார்.

பாஜக எம் கொள்கை எதிரி, நீட் தேர்வுக்கு நாங்கள் எப்போதும் எதிரி என்றெல்லாம் சொல்லி இளைஞர், மாணவர் ஆதரவோடு ஆட்சியைப் பிடித்த விஜய், நீட் தேர்வை ஒழிக்க வேண்டும், ஜந்தர்மந்தர் கொடுமைக்கு மோடி – அமித் ஷா பதில் சொல்ல வேண்டும் என்று போராடுபவர்களுக்கு இடம் கொடுக்கக் கூட மறுத்துவிட்டார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பாலன் இல்லத்தில் மாணவர்கள் அமைதியான முறையில் போராடியபோதும் அதற்கு பல இடஞ்சல்கள் கொடுத்தார்கள் காவல்துறையும் விஜய்யின் ரசிகப் பெருமக்களும். நாடெல்லாம் மாணவர்கள் கொந்தளித்துப் போய் இருக்க, தவெகவின் அமைச்சர்கள் அத்தனை பேரும் விடுமுறை! எடுத்துக் கொண்டு, தன் தலைவரின் கடைசிப் படக் கொண்டாடத்தில் மூழ்கிப் போய் இருந்தது மட்டுமின்றி, கண்ணீர் விட்டு மூக்கு சிந்தியதை ரீல்ஸ் எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தனர். சட்டப்பேரவைத் தலைவர், ‘ஜனநாயகன்’ படம் பார்த்தால் மூளை சுறுசுறுப்பாகும் என்றார். மூளை சுறுசுறுப்பாகி கொடுமைக்கெதிராக கொதித்தெழுந்த இளைஞர்களைதான் கொடூரமாக ஒடுக்கியது காக்கிக்குள் ஒழிந்திருக்கும் காவிக் கூட்டம். பள்ளி, கல்லூரிக்குள் மாணவர்கள் அறப்போராட்டம் நடத்துவதைத் தடுக்கும் தவெக அரசு, தன் கட்சிக்காரர்களும் அமைச்சர்களும் பள்ளிகளுக்குள் சென்று மாணவர்களை விஜய் படப் பாடலைப் பாடச் செய்வதும் டிவிகே, டிவிகே என்று தமது கட்சிப் பெயரை கத்தச் சொல்வதும் விஜய்யின் பொதுக் கூட்டத்தை தொலைக்காட்சியில் பார்க்கச் செய்வதும் நடத்துகிறார்கள். இது அரசமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது. இப்படிச் செய்பவர்கள் தன் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றாலும் நடவடிக்கை பாயும் என்று சொன்ன அமைச்சர் ராஜ்மோகன், காரைக்குடி பள்ளியில் நடந்த சம்பவத்திற்காக அமைச்சர் பிரபு மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்? பிரதான் பதவி விலகிய பிறகு ‘பாலன் இல்லம்’ சென்று நீட்டை நாங்கள் ஆதரிக்கவில்லை என்று பேசிய அமைச்சர் ராஜ்மோகன், ‘NO FAIR NEETBAN NEET’ என்று போராடும் இளைஞர்களுக்கு பொது இடத்தில் இடம் கொடுக்கத் தயாரில்லை. தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் எழுதிய மனோன்மணியம் சுந்தரனார் பெயரில் உள்ள பல்கலைக் கழகத்தில், தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாவதாகத்தான் பாடப் போகிறோம் என்று துணைவேந்தர் முன்னமே அறிவித்துவிட்டபோதும் கண்டு கொள்ளவில்லை இந்த அரசு.

காவிரியில் தண்ணீர் வராமல் விவசாயிகள் வேதனை. மின்வெட்டு அதிகரிப்பு. மின்கட்டணக் குளறுபடிகள். அன்றாட நிகழ்வாக சாதியாதிக்கக் கொலைகள். இப்படி மக்கள் அன்றாடப் பிரச்சனையில் அல்லாடிக் கொண்டிருக்க, எதிர்ப்புக் குரல் கொடுப்பவர்களை ஒடுக்குவதில் இரவு நேரப் பணி செய்து கொண்டிருக்கிறது தவெக அரசு. ‘ஜனநாயகனுக்கு’ ஜனநாயகம் (கொண்டாட்டம்); ஜனநாயகத்துக்கு தடை, தடியடி! பதிலளிக்கப்பட வேண்டிய மக்கள் பிரச்சனைகள் ஏராளமாக உள்ளன. ஆனால் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சிகளும் வேறு திசையில் கொண்டுசெல்ல கடுமையாக முயற்சிக்கின்றன. இந்நிலையில், இடதுசாரிகளே மக்கள் அரசியலுக்கு தலைமை தாங்க வேண்டும். இடதுசாரிகளின் திருச்சி பேரணி கம்யூனிஸ்ட்டுகள் வலுவாகத் தடம் பதிக்கும் அடையாளமாக வேண்டும்.



ஜூலை 20:

# புதிய நம்பிக்கை, மக்கள் சக்தியோடு தில்லி வீதிகள் உயிர் பெற்ற போது..

திபங்கர்

ஜூலை 20, 2026 அய் வரவிருக்கும் பல ஆண்டுகளுக்கு தில்லி நினைவில் வைத்திருக்கும். புதிதாகப் பிறந்த டிஜிட்டல் அமைப்பான கரப்பான் பூச்சி ஜனதா கட்சியும் முற்போக்கு மாணவர் அமைப்புகளும், குறிப்பாக அகில இந்திய மாணவர் கழகமும் (AISA), மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் பதவி விலகலை வலியுறுத்தி, மழைக்கால கூட்டத்தொடரின் தொடக்க நாளில், நாடாளுமன்றத்தை நோக்கி பேரணி நடத்த அழைப்பு விடுத்திருந்தன. இத்தகைய பேரணிக்கு எந்த அனுமதியும் இல்லை; அனுமதியற்ற எந்தவொரு நிகழ்ச்சியிலும் பங்கேற்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற காவல்துறை அறிவுறுத்தலை அரசாங்கம் வெளியிட்டது. மூன்று நாட்களுக்கு முன்பாக, தில்லி காவல் துறை ஆணையரை அமித் ஷா மாற்றியிருந்தார். இதே கோரிக்கையை வலியுறுத்தி ஜந்தர் மந்தரில் காலவரையற்ற பட்டினிப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த பருவநிலை ஆர்வலர் சோனம் வாங்சுக்கை, பேரணிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, சாதாரண உடையில் வந்த காவல் துறையினர் வெள்ளை நிறப் போர்வையால் சுற்றி குண்டுகட்டாகத் தூக்கிச் சென்றனர். இத்தகைய சூழ்நிலைமைகளில், நாடாளுமன்றம் நோக்கிய பேரணிக்குச் சாத்தியமில்லை என்று மோடியின் இந்தியாவில் 'புதிய இயல்பாகிப்போன' பொதுப்புத்தி உணர்த்தியது.

ஜூலை 20, பலத்த மழையுடன் விடிந்த அந்த நாளில், இது போன்றதொரு பேரணியை இதற்கு முன்பு கண்டதில்லை என்பதை தில்லி உணர்ந்தது. தில்லியின் இதயப்பகுதியில் உள்ள ஒவ்வொரு சாலையிலும் இளைஞர்கள் அலையலையாக திரண்டு வந்தனர். அனுபவம் வாய்ந்த ஓட்டப்பந்தய வீரர்கள் தடகளப் போட்டிகளில் தடைகளை எளிதாகக் கடப்பது போல, தில்லி காவல் துறையினர் அமைத்திருந்த தடுப்புகளை அவர்கள் எளிதாக தாண்டிச் சென்றனர். மொத்த தில்லியுமே ஜந்தர் மந்தராக மாறியிருந்தது. ஒவ்வொரு சாலையும் நாடாளுமன்றக் கட்டடத்தை நோக்கியேச் சென்றது. மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கியது. ஆனால் எதிர்க்கட்சிகளின் பலத்த எதிர்ப்பு முழக்கங்களுக்கு மத்தியில் அவை ஒத்திவைக்கப்பட்டது. நேரம் ஆக ஆக தில்லி முழுவதிலுமிருந்து காவல் துறையினரின் கடுமையான தடியடி, கண்ணீர் புகைக்குண்டு வீச்சு, கல்வீச்சு சம்பவங்கள் குறித்த செய்திகள் வந்து குவியத் தொடங்கின. பல பகுதிகள் அடர்ந்த புகையால் சூழப்பட்டு போர்க்களம் போல் காட்சியளித்தன. போராட்டக்காரர்கள் பலர் பலத்த காயமடைந்தனர். ஆனாலும், மூவர்ணக் கொடியையோ, அரசமைப்புச் சட்டப் புத்தகத்தையோ கைகளில் ஏந்தியபடி தடியடிகளை எதிர்கொள்ளும் இளைஞர்களின் காணொளிகள், இந்தியாவினுடைய புதிய தலைமுறையின் துணிச்சலையும் உறுதியையும் வெளிப்படுத்தின. காவல்துறையினரால் அராஜகமாக அகற்றப்பட்டிருந்த 'ஜந்தர் மந்தர் போராட்டக் களம்', மாலை நெருங்க நெருங்க, மீண்டும் போராட்டக்காரர்கள் வசம் வருவதைக் காண முடிந்தது.

சரியாக ஒரு மாதத்திற்கு முன்பு, ஜூன் 20 ஆம் தேதி ஜந்தர் மந்தரில் காத்திருப்புப் போராட்டங்கள் தொடங்கியிருந்தன. ஒரு வாரம் கழித்து, ஜூன் 28 அன்று சோனம் வாங்சுக்கும் அகில இந்திய மாணவர் கழகத்தின் ஆறு தலைவர்களும் காலவரையற்ற பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கினர். நாட்கள் செல்லச் செல்ல, டெல்லியின் கடும் கோடை வெப்பத்தாலும் வியர்வையாலும் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் உடல்நிலை

மோசமடையத் தொடங்கியதால், பட்டினிப் போராட்டம் இருந்த ஆறு மாணவர் தலைவர்களில் மூன்று பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டியதாயிற்று. அதே வேளை, மற்ற மூவரும் உணவு மறுப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். ஆனாலும் அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை. மோடிக்கு வாலாட்டும் ஊடகங்களும் போராட்டச் செய்தியை வெளியிடத் தயாரில்லை. இந்தக் கள்ள மவுனம் போராட்டக்காரர்களைச் சோர்வடையச் செய்யுமென்று அவர்கள் நினைத்திருக்க வேண்டும். ஆனால், வாய்வழிச் செய்தியின் வலிமையும் சமூக ஊடகங்களில் கிடைத்த பரவலான வரவேற்பும் மோடி-அடிவருடி ஊடகங்களின் இந்த வஞ்சகமான வியூகத்தை முறியடித்துவிட்டது. ஜூலை 20 அன்று திரண்ட கூட்டம் அரசாங்கத்தையும் ஊடகத்தையும் முற்றிலும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

டிஜிட்டல் நையாண்டியும் உண்மையான களப் போராட்டமும் இணைந்த இப்புதிய சேர்க்கைக்கு கிடைத்த தன்னிச்சையான ஆதரவின் அளவானது இந்த இயக்கத்தில் ஈடுபட்ட அமைப்புகளின், தூரத்திலிருந்து கவனித்து வந்த எதிர்க்கட்சிகளின் எதிர்பார்ப்புகளையும் மிஞ்சிவிட்டது. 2012ல் அன்னா ஹசாரே தலைமையில் நடந்த ஊழல் எதிர்ப்பு இயக்கம் தந்த ஏமாற்றமான அனுபவத்திலிருந்து பார்க்கும்போது, சிஜேபி நிகழ்வுகள் குறித்தும் நடந்து கொண்டிருக்கும் போராட்டத்தில் சோனம் வாங்சுக்கின் பங்கெடுப்பு குறித்தும் கணிசமான சந்தேகம் இருந்ததும் புரிந்துகொள்ளக் கூடியதே.

ஒரு கல்வியாளர், புதுமைப் படைப்பாளர், பருவநிலை ஆர்வலர் என சோனம் வாங்சுக் பரவலாக அறியப்பட்டவர்தான். என்றாலும் 370வது சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்டதை ஆதரித்தது, மோடி அரசாங்கத்தின் பல கொள்கைகளுக்கு ஆதரவாக அண்மைக்காலம் வரை அவர் எடுத்த நிலைப்பாடுகளால், கல்வி-தேர்வு முறைக்கு எதிராக அவர் எடுத்த இந்தப் புதிய அவதாரத்தின் மீது அதிக நம்பிக்கை ஏற்படவில்லை. இருப்பினும் கல்வி, தேர்வுகள், வேலைவாய்ப்பு என்ற பிரச்சனைகளில் மட்டுமின்றி, அரசாங்கத்தை பொறுப்பாக்குவது என்ற கேள்வியிலும் இந்தப் போராட்டங்கள் இந்திய இளைஞர்களின் ஆழமான உணர்வுகளைத் தொட்டுள்ளன என்பதை ஜூலை 20 அழைப்புக்கு கிடைத்த மாபெரும் மக்கள் ஆதரவு தெளிவாகக் காட்டியது.

இதுவரை இல்லாத அளவில், உற்சாகமான மக்கள் பங்கேற்பு, குறிப்பாக முப்பது வயதுக்குட்பட்ட இசட் தலைமுறை இளைஞர் பட்டாளத்தின் பங்கேற்பு, சமூக, அரசியல் மாற்றத்திற்கான ஒரு சக்தியாக இசட் தலைமுறையினர் தங்களை அறுதியிட்டுக் கொண்டதன் தெளிவான அறிகுறியாக ஜூலை 20-அய் தனித்து நிற்கச் செய்தது. அண்டை நாடான வங்கதேசத்தில் நிகழ்ந்த ஜூலை 2024 எழுச்சி அல்லது நேபாளத்தில் செப்டம்பர் 2025-ல் நடந்த



எழுச்சி, அந்த நாடுகளில் ஆட்சி மாற்றத்திற்கு வழிவகுத்த அந்த இரண்டின் சாயல்களையும் ஜூலை 20 கொண்டிருந்தது. ஆனால் இங்கு, தனது கண்காணிப்பின் கீழ் செயல்படும் துறையில் தொடர்ந்து வினாத்தாள்கள் கசிந்ததற்கு பொறுப்பேற்று, ஒன்றிய கல்வி அமைச்சர் பதவி விலக வேண்டும் என்பது மட்டுமே கோரிக்கையாக இருந்தது. மருத்துவமனையிலிருந்து சோனம் வாங்சுக் அனுப்பிய குறிப்புகளில், அந்த மையக் கோரிக்கையை அவர் தவிர்த்துவிட்டதாகவே தோன்றியது; மேலும் கல்வி குறித்த விவாதத்தை நாடாளுமன்றத்தில் தீவிரமாக முன்னெடுக்க எதிர்க்கட்சிகள் உறுதியளித்தால், தனது பட்டினிப் போராட்டத்தை முடித்துக் கொள்ளத் தயார் என்று அவர் கூறியிருந்தார். அரசாங்கத்தைப் பொறுப்பாக்க வேண்டும் என்ற கோரிக்கையைச் சுருக்கி, எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் கல்விப் பிரச்சனையைக் கிளப்ப வேண்டும் (இதைத்தான் எதிர்க்கட்சிகள் அண்மையக் கூட்டத்தொடர்களில் தொடர்ந்து செய்து வந்தன) என்று கூறியது, அவரது ஆதரவாளர்களைக் குழப்பத்திலும் ஏமாற்றத்திலும் ஆழ்த்தியது.

ஜூலை 20 நாடாளுமன்றப் பேரணியில் பங்கேற்றவர்கள் பாராட்டப்பட வேண்டிய பெருமைக்குரியவர்கள். போதிய தெளிவும் ஒருங்கிணைப்பும் இல்லாவிட்டாலும் கூட, டெல்லியின் பல பகுதிகளில் பேரணியைக் களங்கப்படுத்தவும் தாக்கவும் காவல்துறையினருடன் கைகோர்த்த சங்கிப் படையினரின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளையும் காவல்துறையின் கொடூர தாக்குதல்களையும் தாங்கிக்கொண்டு பேரணியில் பங்கெடுத்தவர்கள் அமைதியாகவும் உறுதியாகவும்

இருந்தனர். ஜனவரி 26, 2021 டிராக்டர் பேரணிக்குப் பிறகு, வரலாற்றுச் சிறப்புமிக்க விவசாயிகள் இயக்கத்தைக் களங்கப்படுத்தவும் தடம்புரளச் செய்யவும் மோடி அரசாங்கம் செய்த சதியை இது நமக்கு நினைவூட்டியது. ஆனால் விவசாயிகள் எவ்வாறு மீண்டும் ஒன்று திரண்டு மீண்டு வந்தார்களோ, மூன்று விவசாய விரோத சட்டங்களும் திரும்பப் பெறப்படும் வரை அந்த இயக்கம் தொடர்ந்ததோ, அதே போன்று, தங்களின் முக்கியக் கோரிக்கைகள் நிறைவேறும் வரை முன்னேறிச் செல்ல தனது இளைஞர்களுக்கு வலிமையும் விடாமுயற்சியும் கிடைக்க இந்தியா விரும்புகிறது.

பத்து ஆண்டுகளுக்கு முன், ரோஹித் வெமுலாவின் அதிர்ச்சியூட்டும் நிறுவனப் படுகொலையைத் தொடர்ந்து, இந்தியாவின் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். மாணவர் தலைவர்களை சிறையில் அடைத்தும் மாணவர் இயக்கத்தை தேச விரோத சதி என்று அவதூறு பரப்பியும் அரசாங்கம் எதிர்பரப்புரை செய்தது. பின்னர் 2020 ஜனவரி-பிப்ரவரியில், மாணவர்களும் குடிமக்களும் குறிப்பாக இஸ்லாமியப் பெண்கள், குடியுரிமைச் சட்டத்தில் செய்யப்பட்ட பிளவுபடுத்துகிற, பாரபட்சமான திருத்தங்களுக்கு எதிராக ஒரு எழுச்சியூட்டும் போராட்ட இயக்கத்தைத் தொடங்கினர். தில்லியில் மதவாத வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டும் சமூக செயல்பாட்டாளர்களை உபா (UAPA) சட்டத்தின் கீழ் சிறையிலடைத்தும் அந்த வரலாற்று சிறப்புமிக்க ஷாஹீன் பாக் போராட்ட இயக்கத்தை ஒடுக்கியது. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகும் உமர் காலித், ஷர்ஜீல் இமாம் போன்ற இளம் அறிஞர்கள் எந்தவொரு விசாரணையும் இன்றி சிறையில் வாடுகின்றனர்.

பல்கலைக்கழக வளாகங்கள் மட்டத்தில் நடந்த கடந்த கால மாணவர் இயக்கங்கள், ஷாஹீன் பாக் போராட்டங்கள் அல்லது தில்லி எல்லையில் நடந்த விவசாயிகளின் இயக்கம் ஆகியவற்றைப் போலல்லாமல், இந்த முறை இளைஞர் இயக்கம் தில்லி இதயப் பகுதியிலேயே தனது இருப்பை உணரச் செய்தது. பல்கலைக்கழக மாணவர்கள் தில்லியின் சுற்றுப்புறங்களைச் சேர்ந்த உள்ளூர் இளைஞர்களுடன் இணைந்தனர்; பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் கலந்தனர்; சமூகங்கள் மற்றும் கலாச்சார எல்லைகளைத் தாண்டி இளம் பெண்கள் இளம் ஆண்களுடன் தோளோடு தோள் சேர்ந்து அணிவகுத்துச் சென்றனர்; இத்தகையதொரு ஒற்றுமைக்கான தளத்தை இது உருவாக்கியது. அகில இந்திய மாணவர் கழகமும் பிற இடதுசாரி மாணவர் அமைப்புகளின் செயல்பாட்டாளர்களும் அனைத்து தடைகளையும் தாண்டி இந்த இயக்கத்தைத் தக்கவைக்கவும் வலுப்படுத்தவும் தங்கள் முழு ஆற்றலையும் முயற்சிகளையும் அர்ப்பணிப்புடன் வெளிப்படுத்தினர். மேலும் பட்டினிப் போராட்டம்



இருந்த நேஹா, தனிஷ், மணீஷ், ஆமீன், ரிஷிகேஷ், தீபக் போன்ற மாணவர் தலைவர்கள், சோனம் வாங்சுக் மற்றும் சிஜேபி தலைவர்களான அபிஜித் திப்கே, சவ்ரவ் தாஸ் போன்றவர்களுடன் எவ்வாறு இணைந்து பணியாற்ற முடியும் என்பதையும் நிரூபித்துக் காட்டினர்.

மிகப்பெரிய அளவிலான வாக்குரிமை பறிப்பு, திட்டமிட்ட வகையிலான அடிப்படை உரிமைகள் மறுப்பு, தொடர் தேர்தல் மோசடிகள், வெறுப்புப் பேச்சு மற்றும், பொய்களின் இடைவிடாத தாக்குதல்கள் மூலம் அச்சமின்றி தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தும் அதிகாரம் பெற்ற குடிமக்களை, அச்சங்கொண்ட, அரசாங்க விசுவாசிகளாக ஆக்கும் வகையில் எங்கும் பரவியுள்ள அச்சத்தையும் விரக்தியையும் மீறி, ஜூலை 2026-ன் ஜந்தர் மந்தர் போராட்டமும் ஜூலை 20-ன் நாடாளுமன்றப் பேரணியும் சமூகத்தின் பெரும் பிரிவினரை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்த அச்சத்தையும் அக்கறையின்மையையும் தீர்மானகரமாக உடைத்தெறிந்துள்ளது என்பதின் அடையாளம் ஆகும். வினாத்தாள் கசிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கேட்டும் கல்வி அமைச்சரைப் பொறுப்பேற்கக் கோரியும் போராட்டக்காரர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைக்க வேண்டியதிருக்கிறது. அப்படியென்றால், மோடி பிரதமர் பதவியில் தொடர தார்மீக உரிமை இருக்கிறதா? இந்திய மக்கள் போதுமான துன்பத்தை அனுபவித்துவிட்டார்கள். இப்போது அவர்கள் அதற்கான பதில்களையும் பொறுப்பேற்பையுமே கோருகிறார்கள்.

**லிபரேஷன், தலையங்கம்,**
**ஆகஸ்ட் 2026**

**தமிழாக்கம்: விஜி**

# பிரதான் பதவி விலகல் – முடிவல்ல, ஒரு துவக்கம்!

வீ.சங்கர்

ஜூலை 20 – பாசிச ஆட்சியாளர்களுக்கோர் கருப்பு நாள். இந்திய இளைஞர்களுக்கோர் சிவப்பு நாள். ஜென் Z எழுச்சி நாள். அது இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு மறக்க முடியாத நாளாக இருக்கும். பாசிச ஆட்சியாளர்களை, அதிகார வர்க்கத்தை இளைய தலைமுறையினர் அடிபணியச் செய்த நாளாக வரலாற்றில் நினைவு கூரப்படும். நியாயத்துக்காக, அமைதியாக அணிவகுத்துப் போராடிய இளைஞர் – மாணவர் மீது ஏவப்பட்ட கொடுங்கோன்மையின் அடையாளமாக இருக்கும். கல்வி-வேலை குறித்த பிரச்சனைகளை அரசியல் பிரச்சனைகளாக மாற்றிய நாளாக இருக்கும்.

வினாத்தாள் கசிவுக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் எனும் ஒற்றை கோரிக்கையில் எழுந்த இயக்கம். 'இது யுபிஏ அல்ல, என்டிஏ. எங்களுக்கு பதவி விலகிப் பழக்கமில்லை' என்ற பாசிச ஆட்சியாளர்களை புறமுதுகிட்டு ஓடோட செய்தது மாபெரும் ஜென் Z இயக்கம்.

ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகினார். தர்மேந்திர பிரதான் பதவி விலகல் முடிவு அல்ல, ஒரு துவக்கம். போராட்டம் நின்றுவிடவில்லை. அது கல்விக்கான – வேலைக்கான ஒரு ஜென் Z இயக்கத்திற்கு, ஜென் Zன் மற்றுமொரு இயக்கத்திற்கு வித்திட்டிருக்கிறது. தர்மேந்திர பிரதானை பதவி விலகக் கோரி எழுந்த இயக்கம் இன்று, இளைஞர் – மாணவர்களை ஜூலை 20ல் ஈவிரக்கமற்ற முறையில் ஒடுக்கிட உத்தரவிட்ட 'அமித்ஷாவே பதவி விலகு, மக்கள் விரோத மோடியே ஆட்சியை விட்டு வெளியேறு' எனும் முழக்கங்களாக வடிவெடுத்து வருகின்றன.

**அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்...**

கரப்பான்பூச்சி ஜனதா கட்சி அறைகூவல் விடுத்தது. அய்சா (AISA) அறைகூவல் விடுத்தது. இடதுசாரி மாணவர் இயக்கங்கள் போராட்டத்தில் உடனிருந்தனர். சமூக ஊடகங்களின் ஆழமான பரவல் அற்புதங்களை நிகழ்த்தியது. அதன் காரணமாக, ஜூலை 20 அன்று லட்சக்கணக்கான இளைஞர்கள் 'நாடாளுமன்றத்திற்குச் செல்வோம், நியாயம் கேட்போம்' என நாடாளுமன்றம் நோக்கி படை எடுத்தனர். பெல்லட் புல்லட்டுகளும், கண்ணீர்ப் புகை குண்டுகளும் ஏகே 47களும் ஆயுதம் ஏதுமற்ற, அமைதிப் போராட்டத்தை அதன் முன்னோக்கிய பயணத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை. மும்பையில் ஓர் இளம் பெண் ஒற்றை ஆளாக நின்று, போலீஸ் வாகனத்தை தடுத்து நிறுத்தி, சட்ட விரோதமாக கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்ய வைத்தார். அந்த வீடியோ நாடு முழுவதும் வைரலாகியது. பீகாரில் அய்சா மாநிலத் தலைவர்கள், திபங்கர் மிஸ்ரா, சபா அஃப்ரீன் உள்ளிட்ட அனைவருமே கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர். சிபிஐஎம்எல் கட்சியின் பீகார் சட்டமன்ற உறுப்பினர் சந்தீப் சௌரவ், ஜேஎன்யு பல்கலைக் கழகத்தின் முன்னாள் தலைவர், அய்சா தலைவர் தனஞ்சய் ஆகியோரும் கூட அதற்கு விதிவிலக்கல்ல. முழுமுற்றாக இணக்கத்துடன் செயல்பட்ட மாணவர்களை மதவெறி அடிப்படையில் துண்டாட முயற்சிக்கிறது பிஜேபி. மேற்கு வங்கத்தில் கைதுசெய்யப்பட்ட 16 பேரில் 15 பேர் இஸ்லாமியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பெங்களூரில் ஒரு அய்சா மாணவரை குறிவைத்து தாக்கி இருக்கிறார்கள் முகமூடி அணிந்த பிஜேபி - ஆர் எஸ் எஸ் காரர்கள்.

லட்சக்கணக்கான ஜென் Z இளைஞர்கள் டெல்லி வீதிகளில் அணிவகுத்ததற்கு அந்த அறைகூவல்கள் மட்டுமே காரணம் அல்ல. மோடி ஆட்சியால், பாசிச சர்வாதிகாரத்தால், வேலை – கல்விப் பிரச்சனைகளால் ஜென் Z இளைஞர்கள் மத்தியில் கனன்று கொண்டிருக்கும் கோபக் கனலின் அடையாளம் அது. அதுதான் முதன்மைக் காரணம். அந்த கோபக் கனலை, அறச் சீற்றத்தை, நியாயத்திற்கான எழுச்சியை ஊதி, பெருங் காட்டுத் தீயாக்குவதில் அந்த அறைகூவல்கள் கண்டிப்பாக ஒரு திட்டவட்டமான பங்காற்றி இருக்கின்றன. அமைப்பு இல்லை. தலைவர் இல்லை. ஆனால், லட்சக்கணக்கானோர் வீதிகளில் அணிவகுத்தனர். அதுதான் இந்த ஜென் Z இயக்கத்தின், ஜூலை 20ன் சிறப்பு.

**கல்வி-வேலை கோரி தொடரும் போராட்டம்**

அந்த இயக்கம் நீட் தேர்வு உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளின் மனிதாபிமானமற்ற, கொடுங்கோன்மைத் தன்மையை, பாசிச மோடியும் ஆட்சியாளர்களும் இளைஞர்களின் எதிர்காலத்தோடு விளையாடுவதை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது. கல்வி தனியார்மயமாக்கம், கல்வி மாஃபியாமயமாக்கம் எப்படி ஏழை மாணவர்களுக்கு கல்வியை எட்டாக்கனியாக்கி இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறது. பாசிச சர்வாதிகார

ஆட்சியாளர்களின் நவதாராளவாத கொள்கைகள், உலகமயமாக்க கொள்கைகள், கல்வியை ஈவிரக்கமற்ற வியாபாரமாக, லாபம் சம்பாதிக்கும் தொழிலாக மாற்றி இருப்பதை விமர்சிக்கிறது. சிதிலமடைந்து கொண்டிருக்கும் கல்வி முறையின் முடைநாற்றம்தான் வினாத்தாள் கசிவுகளும் இதர முறைகேடுகளும் எனச் சொல்கிறது. தேசிய தேர்வு முகமை என்பது ஒரு பித்தலாட்டம் என்கிறது. புதிய கல்விக் கொள்கை எப்படி ஜென் Z இளைஞர்கள் மீது தொடுக்கப்பட்ட புதியதோர் போர் என்பதை விளக்குகிறது.

ஆகவேதான், ஜூலை 20 ஜென் Z எழுச்சி, நீட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளுக்கு எதிரான, தேசிய தேர்வு முகமைக்கு எதிரான, கல்விச் சீர்திருத்தங்களுக்கான தொடர் போராட்டமாக உருவெடுத்திருக்கிறது. அந்த போராட்டத்தை இன்னும் பல கல்வி வளாக மாணவர்களும் தற்போது தொடர்கிறார்கள்.

**போராடும் ஆல்ஃபா தலைமுறை**

ஜென் Z தலைமுறை (14 – 29 வயதுள்ளவர்கள்) மட்டுமல்ல, அவர்களது இளைய தலைமுறையான ஆல்ஃபா தலைமுறையும் (2 - 13 வயதுள்ளவர்கள்) பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளுக்காக, மேலான கல்விக்காக, புதிய வகுப்பறைகளுக்காக, அதிக ஆசிரியர் நியமனத்துக்காக போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் கூட டெல்லி போராட்டத்தில் இருந்தார்கள் என்பது கவனிக்கத்தக்கது. பீகாரில், உத்தர பிரதேசத்தில் அவர்களும் கூட கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பீகாரில் அய்சா தலைமை தாங்கி நடத்திய சாலையோரப் பள்ளிகள் போராட்டம், உபியில் நடந்துவரும் போராட்டம் ஆகியன ஆல்ஃபா தலைமுறையினரின் போராட்டம் எழுந்து வருவதற்கோர் உதாரணம் ஆகும்.

**ஜென் Z தொழிலாளர்கள்**

ஜூலை 20 எழுச்சியில் பெருமளவு கவனிக்கப்படாத மற்றுமொரு பிரிவு இளைய தொழிலாளர்கள். இளைய தொழிலாளர்கள் ஜென் Z போராட்டத்துக்கு பெரும் ஆதரவாக இருந்துள்ளனர் என்பது கவனிக்கப்பட வேண்டிய மற்றுமொரு முக்கிய அம்சம் ஆகும். இதே இளைய தொழிலாளர்கள்தான், நோய்டாவில், மானேசரில், பானிப்பட்டில், சூரத்தில் ஏப்ரல், மே மாதங்களில் எழுந்த தன்னெழுச்சியான தொழிலாளர் பேரெழுச்சிக்கு காரணமாக இருந்தனர். ஊதிய உயர்வுக்காக மிகப்பெரும் போராட்டம் நடத்தி யோகியின் உத்தர பிரதேச அரசையும் ஹரியானா மாநில அரசையும் அடிபணியச் செய்தனர். ஓரளவு ஊதிய உயர்வும் பெற்றனர்.

**மக்கள் போராட்டங்கள்**

சர்வாதிகார ஆட்சியாளர்களின் கொள்கைகள் இந்திய சமுதாயத்தின் இளைய தலைமுறையினரை போராட்டப் பாதைக்குச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கிறது. போராடாமல் அவர்கள் வாழ இயலாது என்கிற நிலைமைக்குத் தள்ளி இருக்கிறது. கல்விப் பிரச்சனைகளுக்கு எதிராக மாணவர்கள் போராடி வருகிறார்கள். வேலை வேண்டும் என இளைஞர்கள் போராடி வருகிறார்கள். ஊதிய உயர்வு வேண்டும் என இளைய தொழிலாளர்கள் போராடி வருகிறார்கள். பணி நிரந்தரத்திற்காக அமைப்பாக்கப்படாத இளைய தொழிலாளர்கள் போராடுகிறார்கள். விவசாயத்தை லாபகரமாக்க வேண்டும் என இளைய விவசாயிகள் போராடி வருகிறார்கள்.

ஆகவேதான், தர்மேந்திர பிரதானை பதவி விலகக் கோரிய இயக்கம், இன்று மோடியை பதவி விலகக் கோரும் இயக்கமாக, மோடியை ஆட்சியை விட்டு வெளியேற்றும் இயக்கமாக உருவெடுத்து வருகிறது.

**வெள்ளையனே வெளியேறு நாள்!**
**மோடியே வெளியேறு என முழங்கும் நாள்!**

ஜூலையை அடுத்து ஆகஸ்ட் வருகிறது. ஆகஸ்ட் இயக்கமாக அது உருவெடுக்கிறது. ஆகஸ்டில் நாடு முழுவதும் ஜென் Z இளைஞர்களின் எழுச்சியை வடிவமைத்திட வேண்டும். அதற்காகப் பணியாற்றிட வேண்டும்.

ஆகஸ்ட் 9 வெள்ளையனே வெளியேறு இயக்க நாள்! மக்கள் விரோத மோடியே, ஆட்சியை விட்டு வெளியேறு என முழங்கும் நாள்! தொழிலாளர்களை அடிமைகளாக்கும் சட்டத் தொகுப்புகளைக் கொண்டு வந்தது மோடி ஆட்சி. 100 நாள் வேலை எனும் உரிமையை ஒழித்து, விபி-கிராம்-ஜி கொண்டு வந்து வேலைகளை ஒழித்தது. அதனால்தான், ''வேலை கொடு'' எனும் இயக்கம் இன்று நாடு முழுவதும் கிராமப் புறங்களில் எழுந்து வருகிறது. விவசாயத் தொழிலாளர்கள் போராடுகிறார்கள். நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் 33 சதவீத இடஒதுக்கீடு உடனடியாக வழங்கிடு, அதனை தொகுதி மறுவரையோடு இணைக்கக் கூடாது என பெண்கள் போராடி வருகிறார்கள். நகர்ப்புறங்களில் வேலை கேட்டு, வேலை கிடைக்கும் வரை நிவாரணம் கேட்டு ஜென் Z இளைஞர்கள் போராடி வருகிறார்கள். தமிழ் நாட்டு முதல்வர் விஜய் உட்பட பல மாநில முதல்வர்களும் அளித்த வேலை வாக்குறுதிகளை இன்னும் நிறைவேற்றவில்லை. வேலை, நிவாரண வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரி ஜென் Z போராடி வருகிறது.

வீடு, வீட்டு மனை, நிலம், பட்டா, கடனிலிருந்து விடுதலை, குறைந்தபட்ச ஊதியம் ஆகியன தமிழ் நாட்டு மக்கள் கோரிக்கைகளாக எழுந்து வருகின்றன. அதற்கான போராட்டங்களைக் கட்டமைக்கும் மாதமாக ஆகஸ்ட் அமைந்திடும்.

**ஆகஸ்ட் 15: சூளுரைக்க வேண்டிய நாள்!**

ஆகஸ்ட் 9 வெள்ளையனே வெளியேறு இயக்கம் துவங்கிய நாளைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 15, இந்திய சுதந்திர நாள் வருகிறது. அன்றைய நாள், பாசிச ஆட்சியாளர்களின் இந்து ராஷ்டிர கனவை தவிடுபொடியாக்கிட

சூளுரை ஏற்கும் நாளாக அமைந்திட வேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டத்தை அகற்றி அதனிடத்தில் மனு (அ)நீதியை சட்டமாக்கத் துடிக்கும் சரவாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிராக போர்ப்பறை முழங்கிட வேண்டிய நாள். நாட்டை காவிமயமாக்கிட முயற்சிக்கும் ஆர் எஸ் எஸ் - பிஜேபியின் அட்டூழியங்களை எதிர்த்திட வேண்டிய நாள். சர்வாதிகாரிகளிடமிருந்து இந்திய ஜனநாயகத்தை மீட்டெடுக்க வேண்டிய நாள். இந்திய சுதந்திரத்தை அமெரிக்க – இஸ்ரேல் காலடிகளில் அடகு வைக்கும் மோடியை அம்பலப்படுத்த வேண்டிய நாள்.

**ஆகஸ்ட் இயக்கம் –**

இந்திய தாய்த் திருநாட்டின் ஜென் Z இளைஞர்கள் முதல் விவசாயிகள், தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் வரை அனைவருக்கும் எதிரான மோடியே பதவி விலகு என முழங்கும் இயக்கமாக இருக்கும்.

**தவெக விஜய் அவர்களே,**

**வாக்குறுதிகளை நிறைவேற்றுக!**

அது மட்டுமல்ல, தமிழ் நாட்டில் புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் முதல்வர் விஜய் தலைமையிலான தவெக ஆட்சி அளித்த தேர்தல் வாக்குறுதிகள் எதையும் இன்னும் நிறைவேற்றிடவில்லை. பெண்களுக்கு மாதம் ரூ 2500, 6 சிலிண்டர்கள், மாநிலம் முழுவதும் பெண்கள் இலவசப் பயணம், இளைஞர்களுக்கு வேலை, வேலை கிடைக்கும் வரை ரூ 4000 நிவாரணம், அனைவருக்கும் கிடைக்கத்தக்க கல்வி, நீட் ரத்து, 5 ஆண்டு பணியாற்றிய தொழிலாளர்களுக்கு பணி நிரந்தரம் உள்ளிட்ட வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. பட்ஜெட்டில் கிடைக்கும் என மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வாக்குறுதிகளை நிறைவேற்றிடவும், இந்த ஆகஸ்ட் இயக்கத்தில், நாம் போராடுவதை தவிர வேறு வழி இருப்பதாக தெரியவில்லை. இந்தித் திணிப்பை எதிர்ப்பதாக சொல்லும் தவெக, சிபிஎஸ்இ பள்ளிகளில் இந்தி கட்டாயமாக்கப்பட்டிருப்பதை மாற்றிட இன்னும் ஏதும் செய்திடவில்லை. தலித் மக்கள் மீதான தாக்குதல்கள், ஆணவப் படுகொலைகள் இன்னும் நின்றபாடில்லை. புதிய கல்விக் கொள்கைக்கு எதிராக, விபி-கிராம்-ஜிக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். மாநில கல்விக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும். கல்வி மாஃபியாக்களிடமிருந்து கல்வியை விடுதலை செய்திட வேண்டும் போன்ற கோரிக்கைகளையும் கூட எழுப்புவதாக இந்த ஆகஸ்ட் இயக்கம் அமைந்திட வேண்டும். வேலை – கல்விக்கான இயக்கமாக, சுதந்திரம் – ஜனநாயகம் காக்கும் இயக்கமாக அது அமைந்திட வேண்டும்.

**மக்களுக்கு எதிரான பாசிச சர்வாதிகார மோடியே,**
**பதவி விலகு!**
**முதல்வர் விஜய் அவர்களே, வாக்குறுதிகளை**
**நிறைவேற்றுக!**

## கரப்பான் பூச்சிக் கட்சியினிரின் மகத்தான சாதனை எது தெரியுமா?




நேகா போரா உள்ளிட்ட போராளிகளுடன் அருந்ததி ராய்

தன்னுடைய போலியான இமேஜை பல்லாண்டுகளாக மிகுந்த கவனத்தோடும் பார்த்துப் பார்த்தும் செதுக்கி வந்தவரை, இன்றும் விஸ்வகுரு என்று கொண்டாடப்படுகின்றவரை இந்தப் பையன்கள் இரண்டே வாரங்களில் அனைத்தையும் உரித்து அம்பலப்படுத்திவிட்டார்கள். இதனைத்தான் நான் இந்த இயக்கத்தின் மகத்தான சாதனை என்று சொல்வேன்.

மனித குல வரலாற்றில் எந்தவொரு ஆட்சித் தலைவரும் – இன்னும் சொல்லப் போனால் எந்தவொரு மனிதரும் இந்த அளவுக்கு கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளானதில்லை. இந்த அளவுக்கு எள்ளி நகையாடப்பட்டவர்கள் வேறு எவருமே இருக்க மாட்டார் என்றே நான் நம்புகின்றேன்.

இந்த இளம் தலைமுறையினரின் இந்தச் சாதனையின் முன்னால் முந்தைய தலைமுறையினர் முட்டாள்களாகக் காட்சி தருகின்றார்கள். இப்படிப்பட்ட …… –ஐயா சகித்துக் கொண்டீர்கள் என்று கேட்பதைப் போன்று இருக்கின்றது.

இன்னும் சொல்லப் போனால் இது ஒரு வகையில் தேர்தலில் வெற்றி பெறுவதைக் காட்டிலும் மகத்தானதாகும்.

சத்தியமாகச் சொல்கின்றேன். என்னால் இனி நிம்மதியாக மரணிக்க முடியும். நான் நிம்மதியாக மரணிக்கப் போகின்றேன்.

– அருந்ததி ராய்

**உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர், சமூக ஆர்வலர்.**



# கால்பந்து உலகக் கோப்பை 2026

எஸ்.குமாரசாமி

31.07.2026

**இறுதிப்போட்டி**

கால்பந்து உலக கோப்பை இறுதிப்போட்டியை, தொலைக்காட்சி வாயிலாக 200 கோடி பேர் வரை பார்த்திருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. பொது பூங்காக்களில், மது விடுதிகளில், வீடுகளில் இருந்து உலகம் முழுவதும் இந்த ஆட்டத்தை கவனித்தார்கள். அய்க்கிய அமெரிக்காவில் ஃபாக்ஸ் டெலிமுண்டோ நிறுவனங்கள் ஒளிபரப்ப, ஆறு கோடியே 60 லட்சம் பேர் பார்த்திருப்பார்கள். மெஸ்ஸியின் மந்திர கால்கள் 40 வயதிலும் சாதனை புரியுமா, தடுப்பாட்டக்காரர்களை எல்லாம் தந்திரமாக ஏமாற்றி, தடைகளை எல்லாம் தாண்டி, காலால் உதைத்தோ தலையால் முட்டியோ கோல் போடுவாரா என்ற எதிர்பார்ப்பு, எல்லா கண்டங்களிலும் இருந்தது. இன்னொரு புறம், மெஸ்ஸி விளையாடிய ஸ்பெயினின் பார்சிலோனா அணிக்காக விளையாடும் 18 வயது இளைஞர் லாமின் யாமல் கோல் போடுவாரா என்ற எதிர்பார்ப்பும், வேகம் அடைந்து வந்தது. யாமல் விறுவிறுப்பான ஆட்டத்தையும் வேகத்தையும் திறமையும் கொண்டிருந்த அதே நேரத்தில், பாலஸ்தீனத்தின் கொடியை உயர்த்திப் பிடித்ததன் மூலம் மானுடத்தின் பக்கம் நின்றார். அர்ஜென்டினாவின் ஆட்சித் தலைவர் மிலேய், இஸ்ரேல் உடைய தீவிர ஆதரவாளராகவும், டிரம்ப்பினுடைய அணுக்கமான நண்பராகவும் இருந்தார். அவருக்கு தெரிந்த ஒரே இடது என்பது, மெஸ்ஸியினுடைய இடது கால் தான் என்று சொல்லி, உலகெங்கும் இருந்த கோடானு கோடி மக்கள் பற்றாளர்களின் உணர்வுகளை, சீண்டியிருந்தார்.

இந்த விளையாட்டில், இப்போது, வரலாற்று முரண் ஒன்று அரங்கேறி உள்ளது. இங்கிலாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து, போர்ச்சுக்கல், நாடுகளோடு சேர்ந்து, நாடு பிடிக்க புறப்பட்ட ஸ்பெயின், சில நூற்றாண்டுகளுக்கு முன்பு அர்ஜென்டினாவை காலனி அடிமைத்தனத்திற்கு உள்ளாக்கியது. இப்போது வரலாறு மாறி, அர்ஜென்டினா, அடிமைத்தனத்தின் பக்கம், ஆதிக்கத்தின் பக்கம், மானுட விரோதி இஸ்ரேலின் பக்கம் நின்றது. ஸ்பெயின், அய்க்கிய அமெரிக்காவை எதிர்ப்பதில், இஸ்ரேலின் இனப்படுகொலையை எதிர்ப்பதில், உறுதியாக இருந்த அதே நேரம், பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக திட்டவட்டமாக நிலைப்பாடு எடுத்திருந்தது. இந்தப் பின்னணியில், விளையாட்டுக்குள் நுழைந்தது அரசியல். முற்போக்கு ஜனநாயக முகாமை சேர்ந்தவர்கள், ஸ்பெயினின் வெற்றிக்காக காத்திருந்தார்கள்.

**ஆட்டம்.**

ஆட்டம் துவங்கியது. 1.1/2 மணி நேரம் முடிந்தது. காய நேரமும், கடந்து போனது. இருதரப்பினரும் ஒரு கோல் கூட போடவில்லை. கூடுதல் நேரத்திற்கு ஆட்டம் சென்றது. ஸ்பெயின் வீரர்கள் வசம் பந்து 68 சதமும் , அர்ஜென்டினாவின் வசம் 32 சதமும் இருந்தது. ஸ்பெயின் வீரர்கள் 803 முறை சக வீரர்களுக்கு பந்தை மாற்றி விட்டார்கள். 90% சரியாக மாற்றி தந்தார்கள். அர்ஜென்டினா வீரர்கள் 445 முறை மட்டுமே பந்தை சகவீரர்களுக்கு மாற்றிவிட்டபோது, அதுவும் 78% மட்டும் சரியாக இருந்தது. அர்ஜென்டினாவின் மெஸ்ஸி உள்ளிட்ட முன்கள ஆட்டக்காரர்கள், முழுமையாக முடக்கப்பட்டார்கள். அந்த நேரத்தில்தான் ஆட்டத்தின் 106 ஆவது நிமிடத்தில் பெட்ரோ பெரோ காலால் உதைத்து கோலை நோக்கி பந்தை கிராஸ் செய்ய, மிகச்சரியாக நிக்கோ தாமஸ் அந்தப் பந்தை தலையால் முட்ட, பதிலியாக களம் கண்ட டோரஸ், தனது இடது காலால் பந்தை கோலுக்குள் உதைத்தார். ஸ்பெயின் தொடர்ச்சியாக 38 வது முறையும் வென்றது. அப்ஜென்டினாவுக்கு எந்த வாய்ப்பும் இறுதி போட்டியில் கிடைக்கவில்லை. அர்ஜென்டினா வீரர் சிகப்பு அட்டை பெற்று வெளியேறியதை தவிர, அவர்கள் தரப்பில், குறிப்பாக எதுவும் நடக்கவில்லை. ஸ்பெயினின் இந்த வெற்றி, பாலஸ்தீனத்தில் காசாவில் மகிழ்ச்சியோடும் பெருமிதத்தோடும் கொண்டாடப்பட்டது. மற்ற சில முக்கிய ஆட்டங்கள் ஆட்டக்காரர்கள் பற்றி சொல்வதற்கு முன்பாக

**கால்பந்து ஆட்டம் – சில வார்த்தைகள்**

ஆசியாவில், ஆப்பிரிக்காவில், அய்ரோப்பாவில், அய்க்கிய அமெரிக்காவில், அமெரிக்க கண்டத்தின் மற்ற நாடுகளில், கால்பந்தாட்டம் விளையாடப்படுகிறது. கால்பந்து விளையாட்டு எளிமையான விளையாட்டு இன்னமும் இந்தியாவின் தமிழ்நாட்டில் எளிய மக்கள் வாழும் பகுதிகளில், கால்பந்து விளையாடப்படுகிறது. ஜந்தர் மந்தர், அப்ஜித் தீப்கே, CJP, AISA, நேஹா போரா என்ற பெயர்களைப் போல், மெஸ்ஸி, யாமல், எம்பாபே, ரொனால்டோ போன்ற பெயர்களும், 2026 உலக கோப்பையை ஒட்டி பிரபலமாகி உள்ளன.

கால்பந்து ஆட்டத்தில், ஓர் அணிக்கு 11 வீரர்கள் வேண்டும். ஒருவர், பந்து வலைப்பகுதிக்குள் கோல் விழாமல் தடுக்கிற கோல் கீப்பராக இருப்பார். மற்றபடி பின்கள நடுகள தடுப்பாட்டக்காரர்கள், நடுகள முன்கள தாக்குதல் ஆட்டக்காரர்கள், இடதுபுறமும் வலது புறமும் ஓரங்களில் ஓடி ஓடி, பந்தை எதிரணியின் கோலுக்குள் கடத்த பார்ப்பவர்கள். முன்கள தாக்குதல் வீரர்கள் இருப்பார்கள். ஆட்ட நேரம் ஒரு பாதிக்கு 45 நிமிடம் என ஓர் இடைவெளியுடன் 1.1/2 மணி நேரம் இருக்கும். அதற்குள் கோல் விழவில்லை என்றால், கூடுதலாக மற்றொரு சிறு இடைவேளை போக, இரண்டு 15 நிமிடங்கள் ஆட்டம் இருக்கும். அப்போதும் கோல் விழாவிட்டால், கோல் வலைக்கு பக்கத்திலிருந்து கோல் கீப்பருக்கும், உதைப்பவருக்கும் இடையில் யாரும் இல்லாமல், பந்தை உதைத்து கோல் போடும் பெனால்டி வாய்ப்பு வழங்கப்படும்.

ஆட்டத்தில் தப்பாட்டம் ஆடப்பட்டால், கீழே விழுந்தவர்கள் காயமடைதல் நேரம் Injury Time என தனியாக வைக்கப்படும். இந்த காய நேரமும், பின்னர் கூடுதலாக சேர்த்துக் கொள்ளப்படும். டெஸ்ட் கிரிக்கெட்டை விட, 50 ஓவர் கிரிக்கெட்டை விட, டி 20 கிரிக்கெட் பிரம்மாண்டமான வணிக வெற்றி பெறுகிறது. அதேபோல் கால்பந்தாட்டமும் அதிகபட்சம் 2.1/2 மணி நேரம் 3 மணி நேரத்தில் முடிந்து விடும். மைதானத்திற்கு ஆள் வருவதற்கும் தொலைக்காட்சியில் காண வைப்பதற்கும், குறுகிய நேரத்தில் விறுவிறுப்பான விளையாட்டு, ஒரு முக்கிய விஷயமாகும். கால்பந்தாட்டத்தில் தலையால் முட்டி கோல் போட அனுமதி உண்டு என்பது மட்டும் இல்லாமல், அது சிறப்பாட்டமாக கூட பார்க்கப்படும். D–க்கு, அதாவது கோலுக்கு பக்கத்தில் உள்ள பகுதிக்கு வெளியில் இருந்து, போடப்படுகிற கோல் பீல்டு கோல் என அழைக்கப்படும். D க்குள் சென்று கோல் போட வேண்டுமென்றால், கோல் கீப்பர் தவிர்த்த எதிரணி ஆட்டக்காரர் ஒருவராவது D க்குள் இருக்க வேண்டும். ஆட்டத்தில் தப்பாட்டம் ஆடினால் மஞ்சள் எச்சரிக்கை அட்டையும், தப்பாட்டத்தை தொடர்ந்தால் சிவப்பு அட்டை வெளியேற்றமும் நடக்கும்.

ஆட்டத்தை பற்றி வேறு சில செய்திகளை காண்போம்.

**2026 உலககோப்பை சில விவரங்கள்**

இந்தப் போட்டியில் அய்ரோப்பாவில் இருந்து இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின், போர்ச்சுக்கல், இத்தாலி, நெதர்லாந்து, பெல்ஜியம், சுவிட்சர்லாந்து, டென்மார்க் குரேசியா, போலந்து, ஸ்வீடன், செர்பியா, வேல்ஸ், செக்குடியரசு என்ற 12 நாடுகள் கலந்து கொண்டன. கண்டத்து நாடுகளில் அர்ஜென்டினா, பிரேசில், உருகுவே, ஈக்வடர், கொலம்பியா, சிலி, பெரு, மெக்சிகோ, கோஸ்டாரிக்கோ, பனாமா, குராக்கோ என்ற 11 நாடுகளும், வட அமெரிக்காவில் இருந்து அய்க்கிய அமெரிக்கா மற்றும் கனடாவும் கலந்து கொண்டன. ஜப்பான், தென்கொரியா, ஈரான், சவுதி அரேபியா, கத்தார், ஈராக், உஸ்பெகிஸ்தான், ஜோர்டான் நாடுகளும் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளும் கலந்து கொண்டன. ஆப்பிரிக்காவிலிருந்து மொராக்கோ, செனிகல், துனீசியா, எகிப்து, நைஜீரியா, கானா, கேமரூன், மாலி, கபே வர்டே ஆகிய நாடுகள், கலந்து கொண்டன.

48 உலக நாடுகள் 12 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு அணியும் அடுத்த மூன்று அணிகளுடன் ஆடி முடித்த பிறகு, 12 நாடுகள் போட்டியிலிருந்து விடை பெற்றன. முன் கால்இறுதி, கால் இறுதி, அரை இறுதிப் போட்டிகள் என்பதாக ஆட்டம் மேலே சென்றது. 104 போட்டிகள் நடைபெற்றன. அய்க்கிய அமெரிக்கா கனடா, மெக்ஸிகோ என்ற மூன்று நாடுகளில், 16 நகரங்களில், 16 விளையாட்டு அரங்கங்களில் நடைபெற்ற 104 ஆட்டங்களை காண, 68,10,996 பார்வையாளர்கள் வருகை தந்தனர்.

சர்வதேச கால்பந்து சம்மேளனம் சென்ற உலகக் கோப்பையில் 7.57 பில்லியன் டாலர் வருவாய் ஈட்டியது. இந்த உலகக் கோப்பையில் வருவாய், 13 பில்லியன் டாலர் ஆனது.

போட்டியில் 308 கோல்கள் போடப்பட்டன. சராசரி பார்த்தால், ஓர் ஆட்டத்திற்கு 2.96 கோல்கள். முதல்முறையாக அதிகபட்சமாக, அணிகள் தமக்கு எதிராக போட்ட சொந்த கோல்கள் 14 என உயர்ந்தது. தொலைதூரத்தில் இருந்து உதைத்து போடப்பட்ட கோல்கள் 37 ஆகவும் பெனால்ட்டியில் போடப்பட்ட கோல்கள் 59 ஆகவும் இருந்தன. இந்த உலகக் கோப்பையில் 16 ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்பெயின் அர்ஜென்டினாவை முறியடித்து வெற்றி பெற்றது. மூன்றாவது இடத்தை இங்கிலாந்தும், நான்காவது இடத்தை பிரான்சும் பெற்றன. ஸ்பெயின் அணியின் தலைவரும் நடுகள வீரருமான ரோட்ரி போட்டியின் ஆகச்சிறந்த வீரருக்கான தங்க கால்பந்தை வென்றார். இந்த போட்டியில் மட்டுமே 10 கோல்கள் போட்ட பிரான்ஸ் அணியின் தலைவர் கிளியன் எம்பாபே இரண்டாவது முறையாக தங்க காலணியை வென்றார். மெஸ்ஸி உலகக் கோப்பை ஆட்டங்களில் 21 கோல்கள் போட்டிருந்த நிலையில், 22 கோல்களுடன் கிளியன் எம்பாபே, அவரைத் தாண்டி சென்று விட்டார். போட்டியின் சிறந்த புதிய வீரர் விருதை, ஸ்பெயினின் பா குப்ராசி பெற்றார். போட்டியின் சிறந்த கோல் கீப்பர் விருதை, ஸ்பெயினின் உனாய் சைமன் வென்று, தங்க கையுறையைப் பெற்றார். ஸ்பெயினுக்கு எதிரான போட்டியில் ஒரே ஒரு கோலை மட்டுமே, உனாய் சைமன் விட்டுக் கொடுத்தார். 650 நிமிடங்கள் ஆட்டத்தில், அவர் ஒரு கோல் கூட விடவில்லை.

5,25,000 மக்கள் தொகை மட்டுமே கொண்டிருக்கிற கபே வெர்டே நாடு, போட்டியை வென்ற ஸ்பெயினை, தனது

முதல் ஆட்டத்திலேயே டிரா செய்தது. அர்ஜென்டினா, இந்த சிறிய நாட்டிற்கு எதிராக தட்டு தடுமாறி 3–2 என்ற கோல் கணக்கில் தான் வென்றது. 2022 உலகக்கோப்பை வென்ற அர்ஜென்டினா அணி, 2026 ல் தொடர்ந்து தடுமாறியது. அரை இறுதி போட்டியை எட்டும் வரை தரவரிசையில் முதல் 15 நாடுகளை அவர்கள் சந்திக்கவில்லை. அர்ஜென்டினா எகிப்திடமும், இங்கிலாந்திடமும் தடுமாறியே வெற்றி பெற்றது. ஸ்பெயின், சவுதி அரேபியா, உருகுவே, போர்ச்சுகல், பெல்ஜியம், ஆஸ்திரியா மற்றும் பிரான்சை எளிதாக வென்று, இறுதி போட்டிக்குள் சென்றது. இங்கிலாந்து காங்கோ ஜனநாயக குடியரசுடன் ஆடிய ஆட்டம் தவிர தவிர்த்து மற்ற ஆட்டங்களில் சிறப்பாகவே விளையாடியது. அர்ஜென்டினா உடன் ஆடியபோது, கடைசி நேரத்தில் முனைப்பிழந்து, நிச்சய வெற்றியை தோல்வியாக மாற்றிக் கொண்டது. போட்டி நெடுக, ஆதிக்கமும் வேகமும் கொண்டிருந்த பிரான்ஸ், அரையிறுதியில் ஸ்பெயினிடமும், மூன்றாவது இடத்திற்கான போட்டியில், இங்கிலாந்திடமும் தோற்றது.

**கால்பந்தும் வணிக மயமும்..**

கால்பந்தில் வணிக மயம் நிகழ்வது புதிய விஷயம் அல்ல. ஆனால் இப்போது அது புதிய உயரங்களை தொட்டு விட்டது என்று சொல்ல முடியும். வீரர்களின் வசதிக்காக என்பதை காட்டிலும், விளம்பர நேர வருமானத்திற்காக, தண்ணீர் அருந்த என்று சொல்லி, இரண்டு புதிய இடைவேளை நேரங்கள் புகுத்தப்பட்டன. குளிரூட்டப்பட்ட மைதானங்களிலும், ஆட்டத்தின் ஓட்டத்திற்கு தடை போடும், இந்த இடைவேளைகள் இருந்தன. அய்க்கிய அமெரிக்காவில் நடைபெற்ற போட்டிகளில், ஒரு போட்டிக்கு ஒரு டிக்கெட் ரூ 11 லட்சத்திற்கு விற்கப்பட்டது, பரவலான கண்டனத்தை பெற்றது. 2026 உலகக்கோப்பையில் விளையாடுபவர்களில், பிரிட்டிஷ் கால்பந்து கிளப்புக்காக விளையாடுபவர்கள் 200 பேர், ஜெர்மனி கிளப்புகளுக்காக விளையாடுபவர்கள் 109 பேர், பிரான்ஸ் கிளப்புகளுக்கு விளையாடுபவர்கள் 86 பேர், ஸ்பெயின் கிளப்புகளுக்கு விளையாடுபவர்கள் 86 பேர், இத்தாலி கிளப்புகளுக்கு விளையாடுபவர்கள் 71 பேர். மொத்த வீரர்களில் 552 பேர் அய்ரோப்பிய கிளப்புகளுக்கு ஆடுபவர்கள். இந்த கிளப்புகளில் 20 கிளப்புகளை, அய்க்கிய அமெரிக்க செல்வந்தர்கள் நடத்துகிறார்கள். 20 பெரிய அய்ரோப்பிய கிளப்புகளுக்கு, அரபு எமிரகமும் அபுதாபியும் ஸ்பான்சர் செய்கிறார்கள். பல ஆட்டங்களை கேலியாக, அபுதாபி எத்திகாத் எதிர் துபாய் ஃப்ளை எமிரேட்ஸ் ஆட்டங்கள் என, அழைக்கிறார்கள்.

எடுவர்டோ கலியானோ, உருகுவே அணியின் கால்பந்து சாம்பியனான கருப்பு அதிசயம் என்று அழைக்கப்பட்ட ஜோஸ் பாரிஸில் இருந்து திரும்பும் போது, ஒரு பட்டு கிமோனோ, சாம்பல் கையுறைகள், ஒரு கைக்கடிகாரம் மட்டுமே 1924 ல் கொண்டு வந்தார் என்றும், இறுதி காலங்களில் பதக்கங்களை விற்று, செய்தித்தாள்களை வீதியில் விற்று வாழ்பவராக இருந்ததாகச் சொல்கிறார். அப்போது ஒரு புட்டி மதுவிற்காக, கொண்டாட்டத்திற்காக, புகழுக்காக கால்பந்து விளையாடப்பட்டது. இன்று போச்சுக்கலின் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் ஓராண்டு வருமானம் 300 பில்லியன் டாலரும், அர்ஜென்டினாவின் மெஸ்ஸி 140 மில்லியன் டாலரும், பிரான்சின் கிளியன் எம்பாபே 100 மில்லியன் டாலரும், நார்வேயின் எர்லிவ் ஹாலந்த் 80 மில்லியன் டாலரும், பிரேசிலின் வினிசியல் ஜூனியர் 60 மில்லியன் டாலரும், எகிப்தின் முகமது சாலே 55 மில்லியன் டாலரும், செனிகலின் சாடியோ மெனோ 54 மில்லியன் டாலரும், இங்கிலாந்தின் ஜூட் பெல்லிங்காம் 44 மில்லியன் டாலரும், பிரான்சின் லாமின் யமால் 43 மில்லியன் டாலரும், இங்கிலாந்தின் ஹேரிகேன் 41 மில்லியன் டாலரும், வருமானமாக ஈட்டுகிறார்கள். (ஒரு மில்லியன் என்பது ரூ 9.7 கோடி ஆகும்.) வணிகமயமான பிறகும், நட்சத்திர வீரர்கள் கோடி கோடியாய் சம்பாதிக்க வாய்ப்பு உள்ள போதும், கால்பந்து விளையாட்டு மக்களால் நேசிக்கப்படும் மக்களை ஈர்த்துக் கொள்ளும் விளையாட்டாக உள்ளது. தமது மாறுபட்ட அணுகுமுறைகளுக்காக அணிகளும் ஆட்டத்திறமைக்காக வீரர்களும் கொண்டாடப்படுகிறார்கள்.

**கருப்பினத்தவர்களும் கால்பந்தும்**

உலக கோப்பையில் விளையாடிய 48 நாடுகளில், அர்ஜென்டினா அணியில் மட்டுமே, ஒரு கருப்பின வீரர் கூட இல்லை. அர்ஜென்டினா இனவெறி நிறவெறிக்காக அவப்புகழ் பெற்றிருந்தது. அர்ஜென்டினாவின் ரசிகர்கள் இனவெறி, நிறவெறி கேலிக்காக, அவப்புகழ் பெற்றிருந்தனர். கால்பந்து விளையாட்டில் மந்திர திறமைகள் கொண்ட லியானல் மெஸ்ஸியை, இனவெறி நிறவெறியை திட்டவட்டமாக கண்டிக்கவில்லை என்ற ஒரு களங்கம் நிழலாக பின் தொடர்கிறது.

பிரான்சின் 26 ஆட்டக்காரர்களில் 21 பேர் கருப்பினத்தவர்கள். இங்கிலாந்து ஆட்டக்காரர்களில் 15 பேரும், நெதர்லாந்தில் 14 பேரும், பெல்ஜியத்தில் 9 பேரும், ஜெர்மனியில் 9 பேரும் கருப்பினத்தவர்கள். ஸ்பெயின் அணியின் சிறந்த இரு இளம் வீரர்களான லேமின் யமாலும், நிக்கோ தாமஸும் ஆப்பிரிக்கா வம்சாவளியினரே ஆவார்கள். உலகத்தின் ஆகப்பெரிய விளையாட்டில், ஆகப்பெரும் எண்ணிக்கையில், ஆகச்சிறந்த கருப்பின வீரர்கள் ஆடுகிறார்கள் என்பது, நிறவெறிக்கு இனவெறிக்கு பலத்த அடியாகும்.

**பிரான்சின் இரண்டு தோல்விகளும் நட்சத்திர ஆட்டக்காரர்களும்.**

கடைசியாக கூட்டி கழித்துப் பார்த்தால் போடுகிற கோல்களே வெற்றி தோல்வியை தீர்மானிக்கும். அசாத்திய வேகம், விளையாட்டு பற்றிய அறிவுத்திறன், அனுபவம், பாதகமான நிலைமைகளை துணிச்சலுடனும் உறுதியுடனும் கடப்பது என்ற விஷயங்களில், முதல் நிலையில் இருந்ததால்தான் எம்பாபே இந்த உலகக் கோப்பையில் 10 கோல்கள் போட முடிந்தது. 40 வயது ஆன நிலையிலும், மெஸ்ஸியின் கால்களும் உடலும் மனமும் துடிப்புடன் இருந்ததால்தான், மெஸ்ஸி இந்த உலகக் கோப்பையிலும் அற்புதமான 8 கோல்களைப் போட்டார். சில கோல்கள் போட உதவினார். இங்கிலாந்தின் ஜூட் பெர்லிங்ஹாம் 7 கோல்களும், அதே நாட்டின் ஹாரி கேன் 6 கோல்களும், நார்வேயின் எர்லிங் ஹாலந்து 7 கோல்களும், பிரான்ஸ் நாட்டின் டெம்ப்ளே 6 கோல்களும் போட்டு, பார்வையாளர்களைக் களிப்படையச் செய்தனர்.

பிரான்சின் இரண்டு தோல்விகள் கால்பந்து

ஆர்வலர்களை வருத்தப்படவைத்தது. இந்த உலகக் கோப்பையை பிரான்ஸ் வெல்லும் என்று நினைக்க வைக்கும் அளவுக்கு, அதன் ஆட்டம் காலிறுதி வரை இருந்தது. எம்பாபே, டெம்ப்ளே, ஒலிசி என்ற பிரான்சின் மூவர், எந்தத் தடுப்புகளையும் தகர்ப்பவர்களாகத் தோன்றினார்கள்.

ஆனால் பிரான்சும் ஸ்பெயினும் சந்தித்தபோது ஆறு ஆட்டங்களில் 13 கோல்களை போட்ட, 10 கோள்கள் போட உதவிய பிரான்சின் எம்பாபே, டெம்ப்ளே ஒலிசி ஆகிய மூவரும், மங்கிப் போன நிழல்களாகவே களத்தில் நின்றனர். ஸ்பெயின் ரோட்ரியும், ரூய்சும் நடுகளத்தை கட்டுப்படுத்தினர். பா குப்ரேசியும் அய்மரிட் லாபோர்டும் எம்பாபேவை நகர விடாமல் தடுத்து விட்டார்கள். பிரான்ஸ் வீரர்கள் 408 முறை பந்தை அடுத்தவரிடம் அனுப்பினர் என்றால், ஸ்பெயின் வீரர்கள் 487 முறை பாஸ் செய்தனர். ஸ்பெயினின் வசம் பந்து 51 சதமும் பிரான்சின் வசம் 49 சதமும் இருந்தது. ஆனால் சிறந்த ஆட்ட முறையும் அணி ஓர்மையும் இருந்ததால் ஸ்பெயின் வெற்றி பெற்றது. ஒரு பெனால்டி, பதிலி ஒருவர் போட்ட கோல் என ஸ்பெயின் 2–0 என வென்றது.

இங்கிலாந்து பிரான்ஸ் ஆட்டம் போட்டியில் ஆகக் கூடுதலாய் 10 கோள்கள் போடப்பட்ட ஆட்டமாக இருந்தது. இடைவேளை வரை இங்கிலாந்து, 3, 18, 37, 45 ஆவது நிமிடங்களில் கோல்களைப் போட்டு 4–0 என முன்னிலை வகித்தது. பிரான்சுக்கு இடைவேளை முடிந்த பிறகு எம்பாபே இரண்டு கோல்கள், பர்கோலா ஒரு கோல், டெம்ப்ளே ஒரு கோல் போட்டனர். 87 ஆவது நிமிடம் புகாயோ சகா மூன்றாவது கோல் இங்கிலாந்துக்காகப் போட, பதிலியாக களம் இறங்கிய ஜுட் பெல்லிங்ஹாம் 98 ஆவது நிமிடம் கோல் போட இங்கிலாந்து 6–4 என வென்றது. கோல் மழை ஆர்வலர்களை நன்றாகவே நனைத்தது.

**ஸ்பெயின் வெற்றி – தனி நபர் பொறுப்பேற்றலும் கூட்டு முயற்சியுமே காரணம்.**

ரோட்ரி, யாமல், நிக்கோ உள்ளிட்ட ஸ்பெயின் வீரர்கள் உலகத்தரம் வாய்ந்த ஆட்டக்காரர்கள். பெல்ஜியம், போர்ச்சுக்கல், அர்ஜென்டினா அணிகளுக்கு எதிரான ஆட்டத்தில் பதிலிகளே கோல் போட்டு, வெற்றி தேடித் தந்தனர்.

இந்த உலகக் கோப்பையில் பந்தை அடுத்த ஆட்டக்காரருக்குக் கடத்துவதில் ஸ்பெயின் ரோட்ரி, அயமெரிக் லபார்டே மற்றும் பா குப்ராசியே முதல் மூன்று இடங்களில் இருந்தனர். தம் வசம் இருந்த பந்தை இழந்த பிறகு, சராசரியாய் 11.75 வினாடிகளுக்குள், ஸ்பெயின் வீரர்கள் பந்தைத் திருப்பி பறித்துக் கொண்டனர்.

அர்ஜென்டினா 17, பிரான்ஸ் 16, இங்கிலாந்து 13 கோல்கள் அரை இறுதி வரை போட்டிருந்த நிலையில், ஸ்பெயின் மொத்தம் 11 கோல்கள் தான் போட்டது. ஆனால் ஸ்பெயினுக்கு எதிராக போட்டி முழுவதும் ஒரு கோல் மட்டுமே போடப்பட்டது.

தாக்குதலுக்கும் தற்காப்பிற்கும் இடையில் சுலபமாக மாறி சென்ற, தனி ஆட்டக்காரரை விட அணியை ஆட்ட முறையை சார்ந்திருந்த ஸ்பெயின் வெற்றி பெற்றது. திறமையாளர்கள் அணியின் வெற்றிக்குப் பங்களிப்பு செய்தனர். ❐

## ஜந்தர்மந்தரில்



நிழலில் வில்லன், நிஜத்தில் கதாநாயகன் திரைக் கலைஞர் பிரகாஷ்ராஜ். அவர் நீட்டிற்கு எதிரான மாணவர்களும் இளைஞர்களும் நடத்திய தில்லி ஜந்தர் மந்தர் போராட்டத்தில் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து நேரடியாகக் கலந்து கொண்டார். அவரிடம், பல திரையுலக பிரபலங்கள் இருக்கையில் நீங்கள் போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறீர்களே என்று பத்திரிகையாளர்கள் கேட்ட போது, "இதுபோன்ற போராட்டங்களில் கலந்து கொள்ளவில்லை என்றால் வயோதிகமடைந்து நான் மரணம் அடைவதற்கு முன்பாக, இப்போதே மரணமடைந்திருப்பேன்" என்று பதில் அளித்தார்.



# இந்திய- அமெரிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை (FTA) முறியடிப்போம்!

சந்திரமோகன்

கடந்த 2026 பிப்ரவரியில், வாஷிங்டனில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பை இந்தியப் பிரதமர் மோடி சந்தித்த உடனேயே, அமெரிக்க அதிகாரி ஒருவர் 'அமெரிக்க - இந்திய வர்த்தக ஒப்பந்தம் சில மாதங்களில் கையெழுத்தாகும்' என அறிவித்தார். இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தால், 'இந்திய விவசாயச் சந்தை முழுமையாக அமெரிக்காவிற்கு திறந்துவிடப்பட்டு, அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் பன்னாட்டு பெரும் நிறுவனங்களின் தங்குதடையற்ற சூறையாடலுக்கு இந்திய விவசாயம் உள்ளாகும் என்பதால் இந்தியாவில் கடும் எதிர்ப்புகள் உருவாகின. எனினும், ஒன்றிய பிஜெபி அரசாங்கம், விவசாயிகள் விரோத, மக்கள் விரோத இந்திய– அமெரிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் (FTA) கையெழுத்திட துடித்துக் கொண்டு இருக்கிறது. 'ஒப்பந்தம் ஏறக்குறைய நிறைவடைந்து விட்டதாகவும், தொடர்ந்து நடைபெற்று வரும் அமெரிக்க வர்த்தக விசாரணைகளால்தான் தாமதம் ஏற்படுகிறது' என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க விவசாயிகள் உற்பத்தி செய்யும் பயிர்களுக்கு நிதி மற்றும் பயிர் பாதுகாப்பு உள்ளது. விலை வீழ்ச்சி அடையாமல் இருக்க அரசு ஏராளமான மானியங்களை வழங்குகிறது. இதனால், (பணமதிப்பின் அடிப்படையில் பார்த்தால்) அமெரிக்கா உலகின் மிகப்பெரிய வேளாண் பொருட்கள் ஏற்றுமதியாளராக இருக்கிறது.

ஆனால், இந்திய விவசாயிகள் கட்டுப்படியாகக் கூடிய விலை, பயிர் காப்பீடு, இயற்கை சீற்றங்களுக்கான நிவாரணங்கள் போன்றவை கிடைக்காததால், கடன் சுமைகளில் சிக்கிக்கொண்டு தற்கொலைகள் செய்து வருகிறார்கள். இத்தகைய சமனற்ற நிலையில், புதியதாக உருவாகும் வர்த்தகப் போட்டியில் இந்திய விவசாயிகள் சிக்கிக் கொண்டால், ஒழித்துக் கட்டப்படுவார்கள்.

**இந்திய- அமெரிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் அமலானால்:-**

*1) இந்திய வேளாண் பொருட்களின் குறைந்தபட்ச ஆதார விலைகளைப் பாதிக்கும்:-*

அமெரிக்க வேளாண் பொருட்கள் (கோதுமை, சோயா உள்ளிட்ட தானியங்கள், பழங்கள், பால் போன்றவை) இறக்குமதி அதிகரித்தால், இந்திய வேளாண் பொருள்கள் / விவசாயப் பயிர்களுக்கான உள்நாட்டுத் தேவை குறையும்; உள்நாட்டுச் சந்தை விலைகளில் சரிவும் ஏற்படும். இதன் தொடர் விளைவாக, உணவுப் பொருள்கள் போன்ற சில வேளாண் பொருட்களுக்கு, தற்போது அமலில் உள்ள 'குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) அடிப்படையிலான அரசு கொள்முதல்' என்ற நடைமுறையை கடுமையாகப் பாதிக்கும்.

*2) பால் உற்பத்திக்கு கடும் அச்சுறுத்தல் ஏற்படும்:-*

'பால் உற்பத்தித் துறை பாதுகாக்கப்படும்' என்று மோடி அரசு அறிவித்திருந்தாலும், இந்தத் தடையற்ற ஒப்பந்தம் வழியாக, அமெரிக்காவின் பெரிய பால் உற்பத்தி நிறுவனங்களுக்கு இந்திய பால் சந்தை திறக்கப்படும் அபாயம் உள்ளது. இதனால், பால் உற்பத்தி செய்யும் இலட்சக்கணக்கான ஏழை விவசாயிகள் வாழ்வாதாரம் அடிவாங்கும்.

*3) உணவுப் பாதுகாப்பை ஒழித்துக் கட்டும் :-*

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வேளாண் பொருட்களை அதிகமாகச் சார்ந்திருப்பது, நீண்ட கால நோக்கில், உள்நாட்டு உணவு தானிய உற்பத்தியை குறைக்கும், அரிசி கோதுமை போன்ற இந்தியாவின் உணவுத் தானியங்கள் தன்னிறைவை கடுமையாகப் பாதிக்கும்.

*4) கார்ப்பரேட் பெருநிறுவனங்களின் ஆதிக்கம் வலுப்படும் : -*

இந்த ஒப்பந்தம், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் பெரிய வேளாண் வணிக நிறுவனங்களுக்கே அதிக நன்மை அளிப்பதாகும். சிறு உற்பத்தியாளர்களை அழித்து, உள்நாட்டு சந்தையை உலகப் பெருநிறுவனங்களின் கொள்ளைக்குத் திறந்துவிடும். இந்திய விவசாயத்தின் மீது கார்ப்பரேட் பெருநிறுவனங்களின் ஆதிக்கத்தை அதிகரிக்கும்.

மொத்தத்தில், இத்தகைய கொள்கைகள் - ஒப்பந்தங்கள், இந்திய மக்களின் தற்சார்பு, இறையாளுமை ஆகியவற்றை சீர்குலைத்து, விவசாயிகள், தொழிலாளர்கள், கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழைகள், வேளாண்மை மற்றும் தொழில்துறை உற்பத்தி ஆகிய அனைத்தையும் அழிக்கும்.

♦ உலகப்பெருநிறுவனங்களின் நலன்களுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அடிபணியும் வகையில் செயல்படுவதை பிஜெபி அரசாங்கம் கைவிட வேண்டும்.

இந்திய- அமெரிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை (FTA) ரத்து செய்ய வேண்டும்!

♦ நாடு முழுவதும் விவசாயிகள் எழுச்சியை கட்டமைப்போம்; விவசாயிகள்- தொழிலாளர்கள் இணைந்த கூட்டுப் போராட்டங்களையும் தீவிரப்படுத்தி, உழைக்கும் மக்களை அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் கார்ப்பரேட் பெருநிறுவன வர்க்கத்திற்கு எதிராக அணிதிரட்டுவோம்! முறியடிப்போம்!

# ஐக்கிய விவசாயிகள் முன்னணி – எஸ்கேஎம் நாடு முழுவதும் எதிர்ப்பு

அகில இந்திய விவசாயிகள் மகாசபை முக்கிய பங்கு வகிக்கும் ஐக்கிய விவசாயிகள் முன்னணி – 'அனைத்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களும் ரத்து செய்யப்படும் வரை' நாடு முழுவதும் மிகப்பெரிய, தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்க தீர்மானித்தது.

கடந்த ஜூலை 22 ம் தேதியை "தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களுக்கு (FTA) எதிரான விவசாயிகளின் உறுதிமொழி நாள்" ஆக கடைப்பிடித்து நாடு முழுவதும் எதிர்ப்புப் போராட்டங்களைக் கட்டமைத்தது. "இந்திய–அமெரிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை அனுமதியோம்" என இலட்சக்கணக்கான கிராமங்களில் விவசாயிகள் ஒன்று கூடி உறுதிமொழி ஏற்றனர்; கிராமங்களில் ஒப்பந்த நகல்கள் மற்றும் மோடி உருவப்படங்களையும் எரித்தனர். மேலும், 'பிரதமர் மோடி ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டாம்" என்று வலியுறுத்தும் விவசாயிகள் கையெழுத்திட்ட கடிதங்களையும், குடியரசுத் தலைவருக்கு ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் அனுப்பினர். "அனைத்து அரசியல் கட்சிகளும் நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் தடையற்ற ஒப்பந்தம் FTA–களை வலுவாக எதிர்க்க வேண்டும் என்றும், தற்போதைய கடுமையான வேளாண் நெருக்கடியால் நிகழும், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் தற்கொலைகளை முடிவுக்குக் கொண்டுவரும் கொள்கைகளை மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்றும், அனைத்து பயிர்களுக்கும் C2+50% அடிப்படையில் குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) சட்டப்பூர்வமாக உறுதி செய்யவும், முழுமையான விவசாயக் கடன் தள்ளுபடி சட்டத்தை இயற்ற வேண்டும்" என்பதையும் ஜூலை 22 விவசாயிகளின் போராட்டம் வலியுறுத்தியது.

2026 ஜூலை 22 ல், தமிழ்நாட்டிலும் இந்திய– அமெரிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்த எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. ஏராளமான கிராமங்களில் ஒப்பந்த நகல், மோடி உருவப்படம் எரிப்பு போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அரசு வெளியிட்ட அறிவிப்பு நகல், மோடி உருவப்படம் எரித்ததை மற்றும் கிழித்ததை தமிழ்நாடு காவல்துறை கடுமையாக தடுத்ததுடன் கைதும் செய்தனர்.

சேலம் மாவட்டம் பனமரத்துப் பட்டியில், இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்த FTA நகல் எரிப்பு போராட்டம் ஜூலை 22 காலை 10 மணியளவில் நடைபெற்றது. த.வி.ச மாவட்டச் செயலாளர் செல்வராஜ் தலைமை தாங்கினார். தோழர்கள் நடராஜன் AIKKMS, மோகன் CPI, அன்பு AIKM, வேல்முருகன் CPIML உட்பட பலரும் உரையாற்றினர். SKM மாநில செயற்பாட்டு குழு உறுப்பினர் சந்திரமோகன் கண்டன உரையாற்றினார்.

# தவெக அரசு விவசாயிகளுக்குக் கொடுத்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றக்கோரி ஆர்ப்பாட்டம்

தவெக தேர்தல் வாக்குறுதியாக, "5 ஏக்கருக்கு கீழ் நிலவுடமை உள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு முழுமையான கடன் தள்ளுபடியும், 5 ஏக்கருக்கு மேல் நிலவுடமை உள்ள விவசாயிகளுக்கு 50% கடன் தள்ளுபடியும் வழங்கப்படும்" என அறிவித்தது. தவெக கட்சி ஆட்சி அமைத்தபின், 50,000 ரூபாய்க்கு கீழ் உள்ளவர்களுக்கு 50% கடன் தள்ளுபடி என்றும், பிறகு விவசாயிகளின் எதிர்ப்புகள் காரணமாக ரூ.75,000 வரை உள்ளவர்களுக்கு முழு தள்ளுபடி எனவும் அறிவித்தது. நிலத்தை அடிப்படையாகக் கொண்டு கடன் தள்ளுபடி அறிவித்துவிட்டு, தற்போது குறிப்பிட்ட அளவு தொகையை அடிப்படை அளவுகோலாக மாற்றுவது, தமிழ்நாடு விவசாயிகளை ஏமாற்றும் செயலாகும். ஏற்கனவே, சிறு, குறு விவசாயிகள் வேளாண் உற்பத்திப் பொருள்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காமல், தொடர்ச்சியாக பெரியளவு நட்டமடைந்து வருகிறார்கள்.தமிழ்நாடு விவசாயிகள் அனைத்து அரசு வங்கிகளிலும், தனியார் வங்கிகளிலும், கூட்டுறவு நிறுவனங்களிலும், தனியார் கந்து வட்டிக்காரர்களிடமும் கடன்களைப் பெற்று மீளாத் துயரத்தில் சிக்கி கொண்டு இருக்கிறார்கள். எனவே, வாக்குறுதிகளை நம்பி வாக்களித்தவர்களுக்கு தவெக அரசு துரோகம் செய்வது சரியல்ல, தவெக அரசு உடனடியாக தேர்தல் வாக்குறுதியின்படி 5 ஏக்கருக்கு கீழ் நிலமுள்ள விவசாயிகளுக்கு முழுக் கடன்களையும் தள்ளுபடி செய்து அறிவிக்க வேண்டும் எனக் கோரி சேலம் மாவட்டம் புழுதிகுட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி முன்பு, 31.7.2026 அன்று ஆர்ப்பாட்டம் எம்.தனபால் தலைமையில் நடைபெற்றது. 300 க்கும் மேற்பட்ட பழங்குடி விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏஐகேஎம் மாநில பொதுச் செயலாளர் அ.சந்திரமோகன் சிறப்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் அய்யந்துரை, ஏஐகேஎம் தலைவர் அன்பு உட்பட பலர் உரையாற்றினர்.



# 33% பெண்கள் இட ஒதுக்கீட்டை உடனே செயல்படுத்துக!





நீண்டகாலமாக கிடப்பில் போடப்பட்டுள்ள 33% பெண்கள் அரசியல் இட ஒதுக்கீடு சட்டத்தை மீண்டும் தள்ளிப்போடும் உள்நோக்கத்துடன் மோடி அரசாங்கம் மக்கள் தொகை கணக்கெடுப்பு, தொகுதி மறுவரையறை இவற்றோடு இணைக்கும் சதித்திட்டத்தை அரங்கேற்ற முயற்சிக்கிறது. இந்த கெடு நோக்கத்தை முறியடிக்கும் விதமாக அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம், இந்திய தேசிய மாதர் சம்மேளனம் ஆகிய மூன்று அமைப்புகள் சேர்ந்த தேசிய பெண்கள் கூட்டமைப்பு நாடு தழுவிய பரப்புரை இயக்கத்தை நடத்தியுள்ளது. தில்லியில் ஊடகவியலாளர் கூட்டம் வாயிலாக பரப்புரையை தொடங்கிய கூட்டமைப்பு, அரசியல் கட்சிகளின் ஆதரவை திரட்டுவது, இணை சட்டப்பேரவை வை நடத்தி தீர்மானம் நிறைவேற்றுவது உள்ளிட்ட பல வடிவங்களில் இந்த இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தியது. தமிழ்நாட்டில், அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டியதுடன் ஜூலை 22, அன்று ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டத்தையும் நடத்தியது. பல நூற்றுக்கணக்கான பெண்கள் திரண்டு காவல்துறை தடுப்பு வளையங்களை துணிச்சலுடன் உடைத்து முன்னேறினர். கைது செய்யப்பட்ட அனைவரும் அன்று மாலை விடுதலை செய்யப்பட்டனர். அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்திலிருந்து தோழர்கள் கிருஷ்ணவேணி, சரோஜா, பிலோமினா, மனோன்மணி, வள்ளிமயில் உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட தோழர்கள் கைதாகி விடுவிக்கப்பட்டனர். அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க தேசிய துணைத்தலைவர் உ.வாசுகி, இந்திய தேசிய மாதர் சம்மேளனத்தின் மாநிலத் தலைவர் ஜி.மஞ்சுளா உள்ளிட்ட பல தலைவர்களும் கலந்து கொண்டு கைதாகினர். இதை அடுத்து இதே கோரிக்கையை வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சருக்கு 29-07-2026 அன்று மனு அளித்தனர். கோரிக்கை மனு கீழே:

**மாண்புமிகு. திரு C.ஜோசப் விஜய்**
**தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,**

வணக்கம். இந்திய மக்கள்தொகையில் பெண்கள் சரிபாதியாக உள்ளனர். ஆனால், நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் இன்னும் மிகவும் குறைவாகவே உள்ளது. பெண்களின் அரசியல் பங்கேற்பை உறுதிப்படுத்தவும், ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தவும் பெண்களுக்கு சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றத்திலும் 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக பெண்கள் இயக்கங்கள், ஜனநாயக அமைப்புகள் மற்றும் முற்போக்கு அரசியல் சக்திகளால் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகிறது.

இந்த நீண்டகாலப் போராட்டத்தின் விளைவாக பெண்கள் இடஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் தொகுதி மறுவரையறை ஆகியவற்றை முன்னிறுத்தி அதன் அமலாக்கம் காலவரையறையின்றி தள்ளிப்போடப்பட்டுள்ளது. இது பெண்களின் அரசியல் உரிமையை மறுக்கும் செயலாகும். இந்த நிபந்தனைகள் காரணமாக பெண்களின் உரிமை மேலும் பல ஆண்டுகள் தாமதப்படுத்தப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். இந்திய அரசியலமைப்பு பெண்களுக்கு சமத்துவ உரிமையை வழங்கியுள்ளது. அந்த உரிமையை நடைமுறைப்படுத்துவது அரசுகளின் கடமையாகும். எனவே, எந்தவித நிபந்தனைகளும் இன்றி, தற்போதே பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீட்டை அமல்படுத்த ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு சட்டமன்றம் சமூகநீதி, சமத்துவம் மற்றும் பெண்களின் உரிமைகளுக்காக பல வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. அதேபோன்று, பெண்களின் அரசியல் உரிமையை நிலைநாட்டும் வகையில், ஒன்றிய பாஜக அரசு பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீட்டை எந்தவித நிபந்தனையும் இன்றி உடனடியாக அமல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றுமாறு அனைத்துப் பெண்கள் கூட்டமைப்பின் சார்பாக தங்களை கேட்டுக்கொள்கிறோம். மேலும், நடைபெற்று வரும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரிலேயே பெண்கள் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம். பெண்களின் அரசியல் பங்கேற்பு அதிகரிப்பதே உண்மையான ஜனநாயகத்தின் அடையாளமாகும். எனவே, பெண்களின் நீண்டகால நியாயமான கோரிக்கைக்கு தமிழ்நாடு அரசு உறுதியான ஆதரவளிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். நன்றி!

**அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம்,**
**இந்திய தேசிய மாதர் சம்மேளனம்,**
**அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம்,**

# ஜூலை 28 தியாகிகள் நாள்;

## ஆகஸ்ட் 9-11 மோடியே பதவி விலகு இயக்கம்!

## கட்சி அமைப்பை வலுப்படுத்துவோம்! வெகுமக்கள் வேலையை விரிவு படுத்துவோம்!

கட்சி மத்திய கமிட்டி விடுத்துள்ள ஜூலை 28 உறுதி ஏற்பை மாநிலம் முழுவதுமுள்ள கட்சி அமைப்புகள் வாசித்து ஆகஸ்ட் இயக்கம் பற்றி முடிவுகள் எடுத்துள்ளன. அவற்றிலிருந்து சில..

ஜூலை 12 அன்று கூடிய மதுரை மாவட்டக் கமிட்டி ஜூலை 28 உறுதி ஏற்பு அறைகூவலை படித்து விவாதித்து.

கட்சிக்குள் உறுதிப்பாட்டைக் கொண்டுவர, ஜூலை 28 அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள, கம்யூனிஸ்ட்களுக்குரிய மூன்று பண்புகளான "துணிச்சல், பொறுமை, வைராக்கியம்" இவற்றின் மீது கருத்துப் பகிர்வு நடைபெற்றது. கட்சி ஒற்றுமைக்கு எதிரான குழுவாதப் போக்கு, வேலைக்கு பொறுப்பேற்காத வெற்று முழக்கங்கள், புதியவளர்ச்சியை பற்றி கவலைப்படாத மேலோட்டமான வேலை, அமைப்பு ஒழுங்குகளை மதிக்காமல் சுற்றி அலையும் வேலை, தலைமை தாங்கும் அமைப்பில் இருந்து கொண்டே கூட்டங்களை புறக்கணிக்கும் தவறு இவைகளை விரட்டி, கட்சி ஒற்றுமையையும், வெகுமக்கள் வேலையில் புதிய வளர்ச்சியையும் கொண்டுவருவது அவசியமென கூட்டம் உணர்ந்தது. இதன் தொடர்ச்சியாக நான்கு மய்யங்களில் ஒவ்வொன்றிலும் 500 இலக்காகக் கொண்ட ஆகஸ்ட் அணிதிரட்டலுக்கு திட்டமிடப்பட்டது. அவிகிதொச உறுப்பனர் சேர்ப்பு, மேலூர், மதுரை மய்யங்களில் மாணவர் வேலைக்கு முதன்மைக் கவனம் செலுத்துவதென்றும் முடிவானது.

இதன் தொடர்ச்சியாக, ஜூலை 28 அன்று, வாடிப்பட்டி ஒன்றிய கூட்டத்தில் அறிக்கை விவாதிக்கப்பட்டது. ஒன்றிய அலுவலகத்தை மாவட்டச் செயலாளர் மெய்யர் திறந்து வைத்தார்.

**வெகுமக்கள் அமைப்பை செயலூக்கப்படுத்துவோம்!**

ஜூலை 27 அன்று நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் மாவட்டங்களின் முன்னணி ஊழியர்கள் 30 பேர் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், தோழர்கள் வீ.சங்கர், சங்கரபாண்டியன் மாநிலச் செயலாளர் ஆசைத்தம்பி கலந்து கொண்டனர். ஆகஸ்ட் அணிதிரட்டல் பற்றி திட்டமிடப்பட்டது. ஜூலை 28 அன்று தூத்துக்குடி ஊழியர் கூட்டம் நடைபெற்றது. தூய்மைப் பணியாளர் அமைப்பை செயலூக்கப்படுத்தி விரிவாக்கி ஆகஸ்ட் அணிதிரட்டல் நடத்துவதென முடிவானது. மாவட்டச் செயலாளர் முருகன், தோழர்கள் சகாயம், பொன்ராஜ் இவர்களுடன் தோழர் சங்கர் கலந்து கொண்டார்.

ஜூலை 28 அன்று, குமரி மாவட்டக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சுசீலா, கார்மல், அந்தோணிமுத்து கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மாநிலச் செயலாளர் ஆசைத்தம்பி கலந்து கொண்டு ஜூலை அறிக்கை பற்றி விளக்கிப் பேசினார். ஆகஸ்ட் 11, அணிதிரட்டல், விதொச உறுப்பினர் சேர்ப்பு கூட்டம் பற்றி திட்டமிடப்பட்டது.

**அரசியல் பேசுவோம்; அரசியல் கற்போம்!**

ஜூலை 28, சென்னை மாநகர சிறப்பு மாவட்டக் கமிட்டிக் கூட்டம் அம்பத்தூர் தோழர் கூடத்தில் மாநகரச் செயலாளர் ஜேம்ஸ் தலைமையில் நடைபெற்றது.பெரும்பாலும் இளைஞர்களையும் தூய்மைப் பணியாளர் உள்ளிட்ட தொழிலாளர் கமிட்டி உறுப்பினர்களையும் கொண்ட கூட்டத்தில் ஜூலை 28 அறிக்கையை அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் குமாரசாமி விரிவாக விளக்கிப் பேசினார்.

வரலாற்றுச்சிறப்புமிக்க ஜந்தர் மந்தர் போராட்டம் பற்றி கருத்து கேட்கப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் ஊக்கமாக கருத்து தெரிவித்தனர். பெண்கள் போராட்டம், இளைஞர்கள் போராட்டத்திற்கு ஆட்சியாளர்கள் அடிபணிந்தே தீர வேண்டும் என்பதை ஜந்தர் மந்தர் போராட்டம் நிருபித்துள்ளது. "அரசியல் நிலைமைகள் வேகமாக மாறி வருகிறது. பிரதானுக்கு அடுத்ததாக பிரதம மந்திரி பதவி விலக வேண்டுமென உரத்து தெரிவித்த தோழர்கள், பிரதமர் பதவியில் தொடரக்கூடாதென்பதற்கு ஆயிரம் காரணங்கள் உள்ளன. அவர் தொடர வேண்டுமென்பதற்கு ஒரு காரணம் கூட இல்லை என்று அடித்துக் கூறினர். வெற்றிகரமான சென்னை தூய்மைப் பணியாளர் போராட்டத்தையும் ஒப்பிட்டு நினைவு கூர்ந்து பேசினர். சென்னை யின் 43 டிவிஷன்களில் 25 டிவிஷன்களில் கட்சிக் கிளைகளை அமைப்பாக்குவதென்ற மிக முக்கியமான முடிவு எடுக்கப்பட்டது. தோழர் கு.பாரதி கலந்து கொண்டு கருத்துகள், ஆலோசனைகள் தெரிவித்துப் பேசினார்.

அதே நாளில், திருவள்ளூர் மாவட்ட ஊழியர் கூட்டம் காரணோடையில் நடைபெற்றது. 5 பெண்கள் உள்ளிட்ட 30 பேர் கலந்து கொண்டனர். ஜூலை 28 உறுதி மொழியின் அடிப்படையில் கிளை வரை கட்சி அமைப்பை முறைப்படுத்தி செயலூக்கப்படுத்துவதென்று முடிவெடுக்கப்பட்டது. நடந்து கொண்டிருக்கும் அவிகிதொச உறுப்பினர் இயக்கத்தில் 20,000 உறுப்பினர்களை சேர்ப்பதென்றும் ஆகஸ்ட் அணிதிரட்டலை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கள்ளக்குறிச்சி கெடிலத்தில் கட்சிக் கிளைச் செயலாளர் கூட்டம் மாவட்டச் செயலாளர் டி.கலியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. பெரும்பகுதி கட்சி கிளைச் செயலாளர்களைக்

கொண்ட 30 பேர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஆகஸ்ட் 11 அணிதிரட்டலில் ஆயிரத்தை நோக்கிய அணிதிரட்டலுக்கு திட்டமிடப்பட்டது. இளைஞர், மாணவர், பெண்கள் அரங்க வேலைகளை தொடங்குவதற்கும் செப் 1 அன்று கட்டுமான அரங்க மாவட்ட முன்னணிகள் கூட்டம் நடத்தி வேலைகளை துவங்குவது, நவம்பரில், 'கடனிலிருந்து விடுதலை; வேலை இல்லா திண்டாட்டத்திலிருந்து விடுதலை' பெருந்திரள் மாநாடு நடத்துவதென்றும் விதொச உறுப்பினர் சேர்ப்பின்போதே காவலர்களையும் அமைப்பாக்க முடிவு செய்யப்பட்டது. கட்சி உறுப்பினர் எண்ணிக்கையை இவ்வாண்டுக்குள் ஆயிரத்தை நோக்கிய வேலை செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. கூட்டத்தில் தோழர் பாலசுந்தரம், கடலூர் மாவட்டச் செயலாளர் சி. ராஜசங்கர் கலந்து கொண்டனர்.

**சேலம் மாவட்டம்**

சேலம் மாவட்டத்தில், பனைமரத்துப்பட்டி ஒன்றிய கமிட்டி, அம்மா பேட்டை உள்ளூர் கமிட்டிகள் கூடின. தோழர். சந்திரமோகன், மாவட்டச் செயலாளர் வேல்முருகன் கலந்து கொண்டு ஜூலை 28 அறிக்கை படித்து விவாதிக்கப்பட்டது. ஆகஸ்ட் 11 அன்று சேலத்தில் அணிதிரட்டல் செய்வதென்று முடிவெடுக்கப்பட்டது. ஆறு கிளைகளிலும் 'ஜூலை அறிக்கை' படித்து விவாதிக்கப்பட்டது.

**மாணவர்கள், இளைஞர்களை அமைப்பாக்குவோம்!**

ஆகஸ்ட் 2 அன்று இணையவழியில் இளைஞர், மாணவர் அமைப்புகளின் மாநிலக் கூட்டம் நடைபெற்றது. 12 மாவட்டங்களிலிருந்து தோழர்கள் கலந்து கொண்டனர்.

ஜந்தர் மந்தர் மாணவர்கள், இளைஞர்கள் போராட்டம் நாட்டின் அரசியல் நிகழ்ச்சி நிரலையே மாற்றியுள்ளது. அரசியல் கட்சிகளும் நாடாளுமன்ற மும் ஜந்தர் மந்தரைச் சுற்றியே சுழன்று வந்தன. மோடி நாள்தோறும் இளைஞர்கள், மாணவர்களை குறிவைத்து வீடியோ வெளியிட்டு வருகிறார். இந்தப் பின்னணியில் அகில இந்திய மாணவர்கழகம், புரட்சிகர இளைஞர் கழகம் அமைப்புகளை செயலூக்கப்படுத்தி மாணவர், இளைஞர் அரசியலில் செயலூக்கமாக தலையீடு செய்வதுபற்றி விவாதிக்கப்பட்டது. அகில இந்திய மாணவர் கழகத் தேசிய தலைவர் நேகா, நாடு தழுவிய சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அந்த பயணத்தின் போது, ஆகஸ்ட் 21 அன்று சென்னையில் அறுநூறு பேர் வரை கலந்து கொள்ளும் மாணவர்-இளைஞர் மாநில கருத்தரங்கம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் கல்விமுறை, ஜனநாயகம் குறித்து இக்கருத்தரங்கு நடைபெறும்.❑

# அதிகாரப் போட்டியில் புதுச்சேரி அரசாங்கமும் அவதிப்படும் மக்களும்

நடந்து முடிந்த தென் மாநில சட்டமன்றத் தேர்தல்களில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. மார்ச் மாதம் தேர்தல் அறிவிப்பு வெளியானது முதல் இப்போது வரை புதுச்சேரி மாநிலத்தில் ஆட்சியாளர்களின் செயல்பாடு பொறுப்பற்றதாகவே இருந்து கொண்டிருக்கிறது. தேசிய ஜனநாயக முன்னணி மீண்டும் ஆட்சியைப் பிடித்து. என். ரங்கசாமி ஐந்தாவது முறையாக முதல்வராகியுள்ளார். ஐந்து அமைச்சர்கள் இரண்டு கட்டங்களாக பதவி ஏற்றனர். ஆனால், அவர்களுக்கு இதுவரை துறைகள் ஒதுக்கப்படவில்லை. பாஜக புதுச்சேரி மாநில பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா பாஜகவை சேர்ந்தவர்களுக்கு அவர்கள் விரும்பும் துறைகளை ஒதுக்கச் சொன்னார். ரங்கசாமி கண்டு கொள்ளவில்லை. அமைச்சர்களுக்கு துறைகள் ஒதுக்க முடியாத அளவிற்கு என். ஆர் காங்கிரஸ் பாஜக இடையிலான ஆட்சி அதிகார போட்டி, செயலற்ற அரசு என எதிர்க்கட்சிகள் கண்டனம் செய்தனர். கடந்த 20.7.2026 இல் அமைச்சர்களுக்கு தன் விருப்பம்போல் துறைகள் ஒதுக்கி துணை நிலை ஆளுநருக்கு கடிதம் அனுப்பினார் ரங்கசாமி. துணை நிலை ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

இது நாள் வரை சட்டப் பேரவை தலைவர், துணைத் தலைவர் தேர்தல் நடத்தப் படாததால் சட்டமன்றம் மூன்று மாதங்களாக கூடவே இல்லை. ஒன்றிய ஆட்சியின் கீழுள்ள புதுச்சேரி மாநிலத்தில் அனைத்து அதிகாரங்களும் துணை நிலை ஆளுநரிடமே குவிந்துள்ளது. நான்கு சட்டமன்ற உறுப்பினர்களே கொண்டுள்ள ஒன்றிய பாஜக புதுச்சேரி மாநிலத்தில் ஆட்சி நடத்துகிறது. ரங்கசாமியும் துணை நிலை ஆளுநரும் அரசமைப்பு சட்ட நெறிமுறைகளை கால்களில் போட்டு மிதித்து ஜனநாயகப்படுகொலை செய்து வருகின்றனர். துணை நிலை ஆளுநர் அதிகாரிகளின் கூட்டங்களையும் மக்கள் குறை தீர்க்கும் நிகழ்வுகளையும் தானே நடத்துகிறார். ஒன்றிய நிதி ஆயோக் அதிகாரிகள் துணைநிலை ஆளுநரை மட்டும் சந்திக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் பொம்மைகளாக உள்ளனர். அதிகாரிகள் எல்லாம் துணை நிலை ஆளுநரின் சொல்படி செயல்படுகிறார்கள். 14,300 கோடி ரூபாய் புதுச்சேரி மாநிலத்திற்கு ஒன்றிய அரசு பட்ஜெட் நிதிக்கு ஒப்புதல் செய்தும் முறையாக சட்டமன்றம் கூடாததால் மக்கள் நல திட்டப் பலன்கள் சென்றடையவில்லை. நியாய விலை கடைகள் முறையாக இயங்கவில்லை. மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படவில்லை. தேசிய வேலை உறுதித் திட்டத்தில் கிராமப்புற வறியவர்களுக்கு ஊதிய பாக்கி, அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், ஊழியர்களுக்கு சம்பளப்பாக்கி என அவலம் நீள்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை ஓரம் கட்டிவிட்டு, துணை நிலை ஆளுநர் மூலம் ஒன்றிய பாஜகவின் உள்துறை அமைச்சகம் புதுச்சேரி மாநிலத்தை ஆண்டு கொண்டிருக்கிறது. இது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. மக்கள் பிரச்சனைகள் குவிந்து கொண்டிருக்கின்றன. புதுச்சேரியில் அடிப்படை ஜனநாயக உரிமைகளும் உணர்வுகளும் புறக்கணிக்கப்படுவதை வாக்களித்த மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டே இருக்க மாட்டார்கள். தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சியாளர்களுக்கு சரியான பாடம் புகட்ட உழைக்கும் மக்கள் ஓரணியில் திரள வேண்டும்.

– சோபா

# பாலின சமத்துவத்தை முன்னிறுத்தும் தொழிற்சங்கங்கள்: தலைமைத்துவம், பிரதிநிதித்துவம் மற்றும் செல்வாக்கை உருவாக்குதல்

பாலின சமத்துவத்தை முன்னிறுத்தும் தொழிற்சங்கங்கள்: தலைமைத்துவம், பிரதிநிதித்துவம் மற்றும் செல்வாக்கை உருவாக்குதல் என்ற தலைப்பில் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (அய்எல்ஓ) ஜூலை 27-28 தேதிகளில் கொச்சியில் பயிற்சிப்பட்டறை நடத்தியது. ஏஅய்சிசிடியு, சிஅய்டியு, ஏஅய்டியுசி, ஏஅய்யுடியுசி, சேவா, எல்பிஎப், எச்எம்எஸ், அய்என்டியுசி, பிஎம்எஸ் ஆகிய தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 52 பிரதிநிதிகள் பங்கேற்றனர். அவர்களில் 32 பேர் நேரடியாகவும், 12 பேர் இணையவழியாகவும் கலந்து கொண்டனர். தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஒடிசா, மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், ஜார்கண்ட், டெல்லி மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர். இந்தப் பயிற்சிப்பட்டறை நடத்தும் பொறுப்பை அய்எல்ஓ - ஜப்பான் ஏற்றுக்கொண்டிருந்தது.

டெல்லியைச் சேர்ந்த அய்எல்ஓ குழுவின் துணை இயக்குநர், தொழிலாளர் செயல்பாடுகள் தொடர்பான நிபுணர், கண்ணியமான வேலை (டீசன்ட் ஒர்க்) குழுவின் மூத்த திட்ட அலுவலர் மற்றும் பாலின சமத்துவம், பாகுபாடின்மை மற்றும் உள்ளடக்கம் தொடர்பான மூத்த வல்லுநர் ஆகியோர் பயிற்சியை நடத்தினர்.

அய்எல்ஓவின் தரப்புகள், பெண்கள் கூடுதலாக தொழிற்சங்கத் தலைமைப் பொறுப்புகளிலும், முடிவெடுக்கும் அமைப்புகளிலும் இடம்பெறு வதற்கான நடவடிக்கைகளை வடிவமைத்து செயல்படுத்துவது, பெண்தொழிலாளர்களுக்கான கொள்கைகளை உருவாக்கி நடைமுறைப்ப டுத்துவதை உறுதி செய்வது ஆகியவற்றில் இந்தப் பயிற்சிப்பட்டறை கவனம் செலுத்தியது.

இந்த ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற 114ஆவது சர்வதேச தொழிலாளர் மாநாடு (அய்எல்சி), வேலைவாய்ப்பு உலகில் பாலின சமத்துவத்தை ஏற்படுத்தும் மாற்றத்திற்கான செயல் திட்டம் குறித்து விவாதித்து, அதை விரைவுபடுத்தும் தீர்மானத்தை நிறைவேற்றியது. அதன்படி, உறுப்புநாடுகள் பணியிட பாலின சமத்துவம் தொடர்புடைய அய்எல்ஓ ஒப்பந்தங்களை அங்கீகரிப்பதை ஊக்குவிப்பதும், அந்த நோக்கத்தை அடைவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது. அதன் ஒரு பகுதியாக இந்தப் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.

பயிற்சிப்பட்டறையின் முதல் நாளில், பணியிடங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து நடைபெற்ற கலந்துரையாடல் மிகவும் உயிரோட்டமாக அமைந்தது. இதில் அனைத்து பிரதிநிதிகளும் எந்தத் தயக்கமும் இன்றி தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டனர். இது பயிற்சிப்பட்டறையின் மய்ய நோக்கத்தை நோக்கி நகர்வதற்கான சூழலை உருவாக்கியது.

பாலின சமத்துவம், பாகுபாடின்மை மற்றும் உள்ளடக்கம் தொடர்பான அய்எல்ஓவின் மூத்த வல்லுநர், இந்தியா அங்கீகரித்துள்ள அய்எல்ஓ ஒப்பந்தங்கள் 29, 100, 111, 105, 138 மற்றும் 182 ஆகியவற்றின் முக்கிய அம்சங்களை விளக்கினார். மேலும், உறுப்புநாடுகளில் பல இன்னும் அங்கீகரிக்காத, ஆனால் பெண்தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க முக்கியத்துவம் வாய்ந்த சில உடன்படிக்கைகள் பற்றியும் எடுத்துரைத்தார். அவற்றில், இல்லப் பணியாளர்களின் நலன் தொடர்பான அய்எல்ஓ ஒப்பந்தம் சி189, இந்தியா இன்னும் அங்கீகரிக்காத ஒன்றாகும். இந்த அமர்வு, அய்எல்ஓ ஒப்பந்தங்கள் குறித்த புரிதலைப் பங்கேற்பாளர்களுக்கு வழங்கியது.

அய்எல்ஓவின் கண்ணியமான வேலை (டீசன்ட் ஒர்க்) குழுவின் மூத்த திட்ட அலுவலர், அய்எல்ஓ தரப்பினரால் முன்வைக்கப்படும் பிரச்சினைகளை ஆய்வு செய்து தீர்வு காணும் நடைமுறைகள் மற்றும் செயல்முறைகள் குறித்து விளக்கமளித்தார்.

பின்னர், பங்கேற்பாளர்கள் மூன்று வளையங்களாகப் பிரிக்கப்பட்டனர். உள் வளையம் தொழிற்சங்கத்தின் தலைமைத்துவத்தை, அதாவது முடிவெடுக்கும் அமைப்பைக் குறித்தது. நடு வளையம், உறுப்பினர்களின் கருத்துகளை தலைமைக்கு எடுத்துச் செல்லும் நிர்வாக நிலைத் தலைவர்களைக் குறித்தது; இவர்கள் முடிவுகள் மீது ஓரளவு மட்டுமே செல்வாக்கு செலுத்த முடியும். வெளி வளையம், தங்கள் பிரச்சினைகளை மட்டும் முன்வைக்க முடியும்; முடிவெடுப்பதிலோ, முடிவுகள் மீது செல்வாக்கு செலுத்துவதிலோ பங்கு இல்லாத சாதாரண உறுப்பினர்களைக் குறித்தது.

அதனைத் தொடர்ந்து, குறிப்பாக வெளி வளையத்தில் உள்ள உறுப்பினர்கள் தலைமை நிலையான உள் வளையத்திற்குச் செல்லும் வகையில், ஒவ்வொரு வளையமும் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் மற்றும் முன்முயற்சிகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. பெண்தொழிலாளர்களின் பல்வேறு பிரச்சினைகள், அவற்றை முன்வைப்பதில் உள்ள தயக்கம், அச்சம் மற்றும் தடைகள் குறித்து விரிவான கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது.

இரண்டாவது நாளில், ஜப்பானிலிருந்து வந்த அய்எல்ஓ கண்ணியமான வேலை (டீசன்ட் ஒர்க்) குழுவின் தொழிலாளர் செயல்பாடுகள் தொடர்பான வல்லுநர், அய்எஓ ஒப்பந்தங்கள் 87 மற்றும் 98 குறித்து விளக்கினார். தொழிற்சங்கங்களை அமைக்கும் உரிமை மற்றும் கூட்டு பேரம் பேசும் உரிமையின் முக்கியத்துவத்தை இவ்விரு



ஏஅய்சிசிடியு பிரதிநிதியாக தோழர் புவனா பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டார்.

ஒப்பந்தங்களும் வலியுறுத்துகின்றன. இந்தியா இந்த இரு ஒப்பந்தங்களையும் அங்கீகரித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, மாநில வாரியாகப் பங்கேற்பாளர்கள், வேலைவாய்ப்பு உலகில் பாலின சமத்துவத்தை உருவாக்கும் மாற்றத்திற்கான செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்திட்டங்களை விவாதித்தனர்.

தமிழ்நாட்டிலிருந்து ஏஅய்சிசிடியு, சிஅய்டியு, ஏஅய்டியுசி, எல்பிஎப், அய்என்டியுசி தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், 12 மாதங்களுக்கான செயல்திட்டத்தை உருவாக்கினர். பயிற்சிப்பட்டறையில் பங்கேற்றவர்கள் மற்றும் மேலும் பல தொழிற்சங்கப் பெண்தலைவர்கள், முதலாளிகள் தரப்பிலிருந்து ஒரு பிரதிநிதி மற்றும் அரசுத் தரப்பிலிருந்து ஒரு பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய குழுவை அமைத்து, தொடக்க ஆலோசனைக் கூட்டத்தை நடத்தி, வேலைவாய்ப்பு உலகில் பாலின சமத்துவத்திற்கான மாற்றுச் செயல் திட்டத்தை உருவாக்குவது முன்மொழியப்பட்டது.

மேலும், அய்எல்ஓவின் உதவியுடன் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அனைத்து துறைகளிலிருந்தும் சுமார் 150 பிரதிநிதிகள் பங்கேற்கும் மாநில அளவிலான பயிற்சிப்பட்டறை நடத்தி, செயல் திட்டத்தை விவாதிக்கவும் முடிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பெண்தொழிலாளர்களின் தலைமைத்துவத் திறனை மேம்படுத்தும் திறன் வளர்ப்பு (கெபாசிடி பில்டிங்) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதன் இலக்காக, 12 மாத காலக்கெடுவின் முடிவில் மாநில அளவிலான பயிற்சிப்பட்டறையில் பங்கேற்கும் குறைந்தது 50 பெண்தொழிலாளர்கள் தங்களது தொழிற்சங்கங்களில் தலைமைப் பொறுப்புகளுக்கு உயர்த்தப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாநிலத்தின் செயல்திட்டங்களும் அந்த மாநில பிரதிநிதிகளால் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

குழு புகைப்படங்கள், பதாகையுடன் தனிப்பட்ட புகைப்படங்கள், செல்ஃபிகள் ஆகியவற்றுடன் பயிற்சிப்பட்டறை நிறைவடைந்தது. பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டவர்களின் பணிகள், செயல்பாடுகள் பற்றி மேலும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பத்துடன் இருந்த பங்கேற்பாளர்கள், தங்களது தொடர்பு எண்களை பரிமாறிக் கொண்டு, ஒருவரையொருவர் தங்கள் மாநிலங்களுக்கு வருமாறு அழைப்பு விடுத்து, இனிய நினைவுகளுடன் தங்கள் பயணங்களைத் தொடர்ந்தனர்.

## ஜூலை 23, மாஞ்சோலை தியாகிகளுக்கு திருநெல்வேலி தாமிரபரணியில் அஞ்சலி







# தவெக அரசுக்கு மேலூர் நில உரிமை மாநாடு கோரிக்கை!

அனைத்துக்கும் நிலமே ஆதாரம். வளர்ச்சி, முன்னேற்றத்தில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது என்று பேசப்படுகிறது. ஆனாலும் தமிழ்நாட்டில் கடுமையான பொருளாதார ஏற்றத்தாழ்வு மிகத் தீவிரமாக உள்ளது. சமத்துவமின்மைக்கும் சமூக அநீதிக்கும் நிலம் முதன்மைக் காரணமாய் உள்ளது. உழவர்கள் கைகளில் நிலம் இல்லை. ஆனால் கோயில்கள், மடங்களுக்கு பல லட்சம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. வீட்டுமனை, வீடு இல்லாத தமிழக ஏழைக் குடும்பங்கள் கோடியைத் தாண்டும். ஆனால், தொழிற்பேட்டைகள், சிறப்பு பொருளாதார மண்டலங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், மருத்துவ நிறுவனங்கள் நிலங்களை விழுங்கி வருகின்றன. 12 லட்சம் ஏக்கர் நிலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு நூறு ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஆனால் எதுவும் அவர்கள் கையில் இல்லை. நீர் வளத்துக்கு ஆதாரமான ஆறுகள், ஏரிகள், கண்மாய்கள் வேகமாய் அழிக்கப்பட்டு வருகின்றன. எனவே புதிய அரசிடம் அனைத்துக்கும் ஆதாரமான. நிலப்பிரச்சனையை முதன்மைப் பிரச்சனையாக எழுப்புகிறவாறு, மதுரை மாவட்டம் மேலூரில் 21.7.2026 அன்று நடைபெற்ற நில உரிமை மாநாடு இருந்தது.

“நிலம் எங்கள் உரிமை!” என்ற முழக்கத்துடன், தலித் மக்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ) விடுதலையும் அனைத்திந்திய விவசாய கிராமப்புர தொழிலாளர் சங்கமும் மேலூர் சட்டமன்றத் தொகுதி அளவிலான ‘நில உரிமை மாநாடு’ வெற்றிகரமாக நடைபெற்றது. கிருஷ்ணகிரியைச் சேர்ந்த பஞ்சமி நிலப் போராட்ட ஆர்வலர் மருத்துவர் குப்பன் மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உற்சாகத்துடன் வாழ்த்திப் பேசினார்.

**தீர்மானங்கள்:**

134 ஆண்டுகளுக்குப்பிறகும் பல லட்சம் ஏக்கர் பஞ்சமி நிலம் தலித்துகளுக்கு சென்று சேரவில்லை. 1994ல் காரணை பஞ்சமி நிலப் போராட்டமும் தியாகிகள் ஜான் தாமஸ், ஏழுமலை படுகொலையும் பஞ்சமி நிலப் போராட்டத்தை முதன்மையான போராட்டப் பிரச்சனையாக்கியது. இடதுசாரி அமைப்புகள், முற்போக்கு ஜனநாயக அமைப்புகளின் தொடர் போராட்டங்கள், அழுத்தங்கள் உயர்நீதிமன்ற தீர்ப்புகள் இவற்றாலும் தொடர்ந்து விவாதப் பொருளாக இருந்தது. ஜெயலலிதா– சசிகலா சிறுதாவூர் பஞ்சமி நிலத்தில் பங்களா கட்டியிருந்தது மருதமுத்து ஆணையத்துக்கு வழிவகுத்தது. ஆனால், ஆணையமும் பரிந்துரையும் காணாமல் போயின. முரசொலி அலுவலகம் பஞ்சமி நிலத்தில் இருப்பதாக ஒரு சர்ச்சை எழுந்தது. அந்த வகையிலும் பஞ்சமி நிலம் மீண்டும் பேசு பொருளாகி ஓய்ந்துள்ளது. இத்தகைய நீண்ட நெடிய வரலாறு கொண்ட பஞ்சமி நிலங்களை மீட்டு ஒடுக்கப்பட்ட ஆதிதிராவிடர் மக்களிடம் ஒப்படைக்க தவெக ஆட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும். சமூகநீதி பேசிய திராவிட ஆட்சிகள் செய்யத் தவறியதை தவெக ஆட்சி செய்திட வேண்டும். சமூகநீதித்துறை என்ற பெயர்மாற்றம் கண்டுள்ள அந்த துறை அமைச்சரை இதற்கென பொறுப்பாக்கி நிறைவேற்றிட வேண்டும். 134 ஆண்டுகளின் துயரக் கதையை முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.

மேலூர் தொகுதியில் 2,800க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் பலவிதமான ஆக்கிரமிப்பில் உள்ளன. அரசின் கைகளிலும் சுமார் 600 ஏக்கர்கள் உள்ளன. பிஆர்பி கிரானைட் நிறுவனமும் பஞ்சமி நிலங்களை அபகரித்துள்ளது. சில கிராமங்களில் தலித் மக்கள் பஞ்சமி நிலத்தை வீடுகட்டி அனுபவித்து வந்தாலும் அவை சட்டரீதியாக பட்டா உரிமை வழங்கப்படவில்லை. எனவே, மேலூர் காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினரும் உயர்கல்வித்துறை அமைச்சருமான திரு விஸ்வநாதன் இதை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று நிலங்களை தலித் மக்களுக்கு ஒப்படைக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாநாடு வலியுறுத்துகிறது.

வருவாய்த்துறையின் கால தாமதம் இழுத்த

டிப்புகளைத் தவிர்க்கவும், நிலம் பஞ்சமி நிலம் அல்ல என்பதை நிரூபிக்கும் பொறுப்பை ஆக்கிரமிப்பாளர் மீதே சுமத்தவும் தனி 'சிறப்பு நீதிமன்றம்' உருவாக்கப்படவும் அரசுக்கு பரிந்துரைக்க வேண்டும்.

பெரியார் கால்வாய் திட்டம், கிரானைட் முறைகேடுகளால் முடக்கப்பட்ட நிலங்களை மீட்டு, விவசாயிகளுக்கும் வீடற்ற ஏழைகளுக்கும் போர்க்கால அடிப்படையில் பகிர்ந்தளிக்க வேண்டும்.

வீட்டுமனை, வீடு: மாநிலம் முழுவதும் சொந்த வீடற்ற குடும்பங்களின் கணக்கெடுப்பை அரசு நடத்திட வேண்டும்; பெண்களது கவுரவம் காக்கும் வகையில் கிராமப்புர, நகர்ப்புர பொது, தனிநபர் கழிப்பறை வசதி போர்க்கால அடிப்படையில் ஏற்படுத்தித் தர வேண்டும்.

தூய்மைக் காவலர்களுக்கு அரசாணை 62-ன்படி தூய்மைப் பணியாளர்களுக்கு பஞ்சப்படியுடன் நாளொன்றுக்கு ரூ. 722 வழங்கப்படுவதை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் உறுதி செய்ய வேண்டும்.

மேலூர் அரசுக் கல்லூரியை மேம்படுத்திட உயர்கல்வித் துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்;

விபி.ஜி.ராம்.ஜி சட்டத்தை ரத்து செய்து மேம்படுத்தப்பட்ட வகையில் மகாத்மா காந்தி ஊரக வேலைத்திட்டத்தை மீண்டும் கொண்டுவரவும் கண் கருவிழிகள் படம், கைரேகை எடுப்பதை தடை செய்யவும் ஒன்றிய அரசை வலியுறுத்தி வரும் பட்ஜட் கூட்டத்தொடரில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென தவெக அரசை மாநாடு வலியுறுத்துகிறது.

நீண்டகாலமாக நிறைவேற்றப்படாமல் இருக்கும் பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டை நிபந்தனைகள் எதுவுமின்றி (தொகுதி மறு வரையறை, மக்கள்தொகை கணக்கெடுப்பு) மோடி அரசு உடனடியாக நடைமுறைப்படுத்த சட்டப்பேரவைத் தீர்மானம் வாயிலாக ஒன்றிய அரசை வலியுறுத்திட வேண்டும்.

- பஞ்சமி நில மீட்பு போராட்டத்தில் ஈடுபட்டு மிகக்கொடூரமான தாக்குதலை எதிர்கொண்ட தோழர் முத்துராஜ் அவர்களுக்கு உரிய இழப்பீட்டையும், சட்ட உதவிகளையும் தமிழ்நாடு அரசு அளிக்க வேண்டும்.

இகக(மாலெ) மாவட்டக் கமிட்டி உறுப்பினர் S. சந்திவீரன் மாநாட்டுக்கு தலைமை தாங்கினார்.

மாநிலக் கமிட்டி உறுப்பினர் தேவராஜ் வரவேற்புரையாற்றினார்.

தோழர்கள் பாலசுந்தரம், அகில இந்திய மாணவர் கழகத்தின் பாண்டிக்குமார், சிவகங்கை மாவட்டக்குழு உறுப்பினர் மதிவாணன் உள்ளிட்ட பலர் பேசினர்

மாநாட்டுத் தீர்மானங்களை, மாவட்டச் செயலாளர் மெய்யர் முன்மொழிந்து நிறைவேற்றினார்.

கீழவளவு கிராமத்தைச் சேர்ந்த தோழர்கள் லட்சுமி, சின்னப்பிள்ளை, திடீர்நகரைச் சேர்ந்த நாகேஸ்வரி, ரெங்கசாமிபுரத்தைச் சேர்ந்த காலம்முத்து, பெரியசாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு தங்களது வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்து உரையாற்றியது ஒட்டு மொத்த மாநாட்டின் கவனத்தை ஈர்த்தது. தோழர் திலகர் மேடையில் இருந்தார்.


# இடதுசாரி கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் – அக்டோபர் 6ல் திருச்சியில் மாபெரும் பேரணி

இகக, இகக(மா), இகக(மாலெ)விடுதலை ஆகிய இடதுசாரி கட்சிகளின் ஒருங்கிணைப்பு குழு கூட்டம், 4.8.2026 அன்று சென்னையில், சிபிஎம் கட்சி மாநிலக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது.
இகக(மா) மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், இகக மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், இகக(மாலெ) மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி உள்ளிட்ட ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் சம்பத், குணசேகரன், சாமுவேல்ராஜ், பாலபாரதி, பெரியசாமி, மூர்த்தி, ரவி, வஹிதா நிஜாம், பாலசுந்தரம், சந்திரமோகன், ஜானகிராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இன்றைய அரசியல் நிலை குறித்து விவாதித்த கூட்டம், இடதுசாரிகளே மாற்று என்பதை வலியுறுத்தி, அக்.6 ல் திருச்சியில் மாபெரும் பேரணி நடத்த முடிவு செய்தது.



# பிரணாப் தாவையும், துர்காபூர் 'ஸ்டீல் உருக்காலை'யையும் நினைவு கூறுதல்

**திபங்கர்**



ஜூலை 26 தோழர் பிரணாப் தாவின் (துர்ஜதி பிரசாத் பக்ஷி – டி.பி.பக்ஷி) நினைவு நாளாகும். 1960களின் பிற்பகுதியில், துர்காபூர் பிராந்திய பொறியியல் கல்லூரியில் தனது மாணவர் பருவத்தில் நக்சல்பாரி பேரெழுச்சியால் ஈர்க்கப்பட்டு அரசியல் பயணத்தைத் தொடங்கிய இந்த உறுதிமிக்க புரட்சியாளர், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு புற்றுநோயால் காலமானார்.

மார்ச் 2018 இல் பஞ்சாபின் மான்சாவில் நமது பத்தாவது கட்சி காங்கிரஸ் நடைபெற்றது. தனது அமைப்பாளர் உள்ளுணர்வு, பயிற்சிக்கு உண்மையானவராக, இந்த மாபெரும் நிகழ்வை ஏற்பாடு செய்ய, பஞ்சாப் தோழர்களுக்கு உதவ, பஞ்சாபிற்கு வெளியிலிருந்து மான்சாவுக்குச் சென்று பணியாற்றிய முதல் மத்தியத் தலைவர் தோழர் பிரணாப்.

ஆனால் அவரது உடல் சோர்வின் அறிகுறிகள் தென்படத் தொடங்கியதை நாங்கள் காண முடிந்தது, மேலும் புற்றுநோயுடனான ஒரு குறுகிய போராட்டத்திற்குப் பிறகு அவரது நீண்ட, அயராத பயணம் ஜூலை 26 அன்று முடிந்தது.

அவர் ஒரு சிறந்த அமைப்பாளராக இருந்தார், பல்வேறு கடினமான சூழ்நிலைகளுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளவும், பல்வேறு பின்னணிகளைக் கொண்ட தோழர்களுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளவும் அவரால் முடிந்தது.

கொந்தளிப்பான அசாம் இயக்கக் காலத்தில் பிரணாப் தா அசாமில் சில ஆண்டுகள் பணியாற்றினார், அசாமிய மொழியில் பெரும் புலமை பெற்றார்; அத்துடன் கர்பி அங்லாங் மலை மாவட்டம் உட்பட அசாமின் பல்வேறு பகுதிகளில் கட்சியின் விரிவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தார்.

பிற்காலத்தில், ஒடிசா, ஜார்க்கண்டிலும் அவர் இதே போன்ற ஒரு பாத்திரத்தில் பணியாற்றியதை பார்த்திருக்கிறோம்.

எஸ்.எஸ். ரேயின் அடக்குமுறை ஆட்சியின் போது மேற்கு வங்கத்தில் பல ஆண்டுகள் சிறைவாசத்தையும் உள்ளடக்கிய அவரது அய்ம்பது ஆண்டுகால கம்யூனிச வாழ்க்கையின் இரண்டு வரையறுக்கும் குணங்கள் பிடிவாதமும், சூழலுக்கேற்ப மாறும் திறனுமாகும். இந்த விடாமுயற்சிக்கும் தகவமைப்புத் திறனுக்குமான காரணம் என்ன?

தோழர் பிரணாப் தாவுக்கும் அவரது தலைமுறையினருக்கும், இவை மிகச்சிறந்த கம்யூனிச குணங்களாக இருந்தன, அவற்றை மாலெ இயக்கத்தின் அடிப்படைகளாகவும், நக்சல்பாரி பாரம்பரியத்தின் முக்கிய விழுமியங்களாகவும் ஆரம்பத்திலேயே கற்றுக்கொண்டனர், மேலும் அவர்களின் அடிப்படை கம்யூனிச கல்வியின் ஒரு பகுதியாக இந்த குணங்களுடன் வளர்ந்தனர்.

அறிவாளித்தனமான திமிரையும், சுயநலத்தையும் முழுமையாகக் கைவிடுவது, மக்களுடன் ஒருங்கிணைவது, வெற்றிக்கான திறவுகோலாக விடாப்பிடியான முயற்சியைப் பயிற்சி செய்வது – இவைதான் அவர்கள் கம்யூனிஸ்ட் ஆக கற்றுக் கொண்ட கொள்கைகள்.

துர்காபூர் பிராந்திய பொறியியல் கல்லூரி மாணவர் இயக்கத்திற்கும் துர்காபூர் எஃகு ஆலை தொழிலாளர் வர்க்க இயக்கத்திற்கும் இடையிலான நெருக்கமான பிணைப்பு தான், பொறியியல் மாணவர்கள், எஃகு ஆலைத் தொழிலாளர் இருவரிடமிருந்தும் ஏராளமான கம்யூனிசப் புரட்சியாளர்களை உருவாக்கிய களமாக அமைந்தது.

அவர்களின் தனித்துவமான விடாமுயற்சி, ஒழுக்கம், துணிச்சல், முன்முயற்சியுடன், 1970 களின் முற்பகுதியில் ஏற்பட்ட கடுமையான பின்னடைவுக்குப் பிறகு இகக(மாலெ) கட்சியையும் இயக்கத்தையும் மறுகட்டமைப்பதில் அவர்கள் முக்கிய பங்காற்றினர் .

போஜ்பூரும் பீகாரும் ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சியின் உயிர்ப்பையும் ஆற்றலையும் இதனுடன் சேர்த்தன; மேலும் இகக(மாலெ) பின்னடைவை தாக்குப்பிடித்துநின்று அதை இந்தியாவின் சமூக பரப்பில் ஆழமாக வேரூன்ற உதவியது.

இன்று பிரணாப் தாவின் இரண்டாவது நினைவு நாளில், இந்த கம்யூனிச சிற்பிகளுக்கும் இகக(மாலெ) வளர்ச்சிக்கு அவர்களின் மகத்தான பங்களிப்புக்கும் வணக்கம் செலுத்துவோம்.

இந்த துர்காபூர் 'ஸ்டீல் மெல்டிங் ஷாப்'–லிருந்து உருவான நான்கு தோழர்களுக்கு அஞ்சலிகள் – பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த தோழர்கள் வினோத் மிஸ்ரா, பிரணாப் தா (டி.பி. பக்ஷி) மற்றும் முன்னணி தொழிலாளரில் இருவரான தோழர்கள் அனல் தா (சுதர்சன் பாசு), சாந்தனு பக்ஷி ஆகியோர் நம்முடன் இப்போது இல்லை.

இதே பின்னணியில் இருந்து வந்த இன்னும் பல தோழர்கள் இன்றும் நம்மிடையே வாழ்ந்து, தங்களின் முழு பலத்துடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் அனைவரின் பெயர்களையும் குறிப்பிட்டுச் சொல்லாமல் அவர்களை வணங்குகிறேன். (மீள் பதிவு)

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted at Egmore RMS/1 Published on 1st and 16th of every month R.DIS: 2804/17

# நீட் தேர்வு வேண்டாம்!
# மாணவர், இளைஞர், பெண்கள் மீதான தாக்குதலுக்கு
# மோடி அரசே! பதவி விலகு!








Owned and **Published** by **S.Balasundaram** from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by **Chennai Offset Printers,** 19/1,21/2, KitabathKhan Bahadur street, Ellis Rd, **Chennai** - 600002. **Editor G.Ramesh**